ஸ்ரீராமஜெயம்

# வாஸனானுபவ பூமிகை

## அணிந்துரை

ஆசார்யனைக் காட்டிலும் ஸத்குருவைக் காட்டிலும் உயர்ந்த தெய்வம் ஒன்றிருப்பதாக நாங்கள் எண்ணேம் என்றார் ஸ்ரீவேதாந்த தேசிகன். மேலும் 'மந்த்ரே தீர்த்தே த்விஜே தேவே தெய்வக்ஞே பேஷஜே குரௌ யாத்ருசீம் பாவனாம் குர்யாத் ஸித்திர்பவதி தாத்ருசீ' என்ற சுலோகமும் குருவினிடத்தில் பக்தி செய்பவனின் பெருமையைப் பேசுகிறது. "தேவமிவ ஆசார்யம் உபாஸீத" என்று வேதமும் ஓதியது.

ஸ்ரீத்யாகராஜரை அறியாத ஜீவன் இன்றில்லை. அவர்தம் பெருமை வாக்குக்கும் மனதிற்கும் எட்டாதது. ஸங்கீதத்தின் ஒளியாய் விளங்கிய அம்மஹான் உலகம் காக்க வந்த பரம்பொருளே என்ற திடமான விச்வாஸமுடையவர்கள் விண்ணுளாரிலும் சீரியர்.

எந்தரோ மஹானுபாவுலு என்பர் ஸ்ரீத்யாகப்ரம்ஹம். மஹானுபாவர்கள் எங்கிருப்பர் எவ்வாறிருப்பர் என்பதையும் எளிதில் அறிவது கடினம். இத்தகையோர் எக்காலத்திலும் தோன்றலாம். பக்தர்கள் தமது அனுபவத்தின் பரீவாஹமாகப் பல அனுபவங்களை உள்ளடக்காமல் வெளியிடுகின்றனர். அது உலகுக்குப் பரம லாபமாக அமைகிறது. இவ்வாறு பக்தி வெள்ளத்தினால் தோன்றும் துதிநூல்கள் மிகமிகச் சீரியவை. தெய்வீகத்தன்மை வாய்ந்தவை. காலதத்துவமுள்ளளவும் விளங்குபவை. இவ்வகைத்துதிநூல்கள் பெருமை தருவதுடன் பெருமையோடு விளங்குகின்றன.

ஈடுபாட்டின் மிகுதியே தெய்வீகத் தன்மையாகும். இத்தகைய ப்ரவ்ருத்தி யோகிகளுக்கோ மகரிஷிகளுக்கோ தோன்றினால் வியப்பில்லை. ஸம்ஸாரத்தில் ஸுக, துக்கங்களுக்கிடையே ஒருவரிடமிருந்து தோன்றினால் அவர் தெய்வாம்சம் பெற்றவர் என்பதில் எவ்வித ஸந்தேகமும் இல்லை. முன்பிறவிகளில் யோகம் உச்சநிலையடைந்து ஒருகாரண விசேஷத்தால் அப்போது அது பலன் தராமல் மறுபிறவியில் பயன் அளிக்கத்தொடங்கும் என்பதையும் ஒருவாறு உணரலாம்.

இவ்வடிப்படையில் இன்று அத்புதமான நாமாவளிகள் நூறு, முன்னூறு, ஐந்நூறு, ஆயிரம் என்ற கணக்கில் தோன்றுகின்றன என்றால் இதனிலும் வியக்கத்தக்கது வேறொன்றில்லை.

திருக்கோவலூர் என்பது வைணவ மரபில் நடுநாட்டுத் திருப்பதி எனப்படும். இங்கு உலகளந்த பெருமாள் ஆயனாராய் ஸேவை ஸாதிக்கிறார். இங்கு கோயில் கொண்டுள்ள தாயாரின் பெயர் புஷ்பவல்லி. இவளுடைய திருநாமம் சூடப்பெற்று தனித்திருவுடன் விளங்குபவர் ஸ்ரீமதி புஷ்பவல்லி ஸ்ரீவத்ஸன். சாந்தி, விரக்தி, பக்தி இவற்றை அணிகலமாகப்

பெற்றவர். இவருடைய பக்வமான மனோநிலையால், வைராக்யம், விவேகம், விழிப்புணர்ச்சி ஆகியவற்றால் பெருமை பெற்றிருக்கிறார். உண்ணும் சோறு, பருகு நீர், தின்னும் வெற்றிலை எல்லாம் கண்ணன் எம்பெருமான் என்ற நம்மாழ்வாரின் நிலையை மெய்ப்பிக்கும் வண்ணம் த்யாகப்ரம்ஹத்தையன்றி வேறில்லை எனும் நிலையில் அனவரதத்யானத்தினால் அவரிடத்தில் அனுராகமும் உலகியலில் வைராக்யமும் அமையப் பெற்று சாந்தி ஸ்வரூபியாய் இருக்கிறார்.

கணிதத்தில் சில ஆண்டுகள் கல்லூரிப் பேராசிரியையாய்ப் பணியாற்றியும் 'நிதி த்ஸால ஸுகமா' எனும் ஸ்ரீத்யாகப்ரம்ஹத்தின் வாக்குக்கேற்ப எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஸத்குருவின் திருவடிகளே கதி என்று அவர்தம் பணிக்குத் தன்னை முழுவதுமாக அர்ப்பணித்துக் கொண்டுள்ளார். ஸத்குருவின் திருவுள்ளத்தை திருவாணையாகவும் பெருந்துணையாகவும் கொண்டு பக்தர்கள் விரும்பும் ஏகாந்த அனுபவ நிலையை தனக்கு உரியதாக்கிக் கொண்ட பெருமை இவரிடத்தில் விளங்குகிறது.

உலகின் பாக்யத்தாலும் இவரது தவப்பயனாலும் த்யாகப்ரம்ஹத்தைப் பற்றிய இந்நாமாவளிகள் அவதரித்துள்ளன. அத்புதமான த்யாகப்ரம்ஹத்தில் ஈடுபட்டு நெஞ்சாழும் கண் சுழலும் என்கிற உன்னத நிலையை அடைந்து பல திவ்ய நாமாக்களைத் தொகுத்து அஷ்டோத்தரசதம் - த்ரிசதீ - பஞ்சசதீ - ஸஹஸ்ரம் என்ற கணக்கில் அனுஸந்தானம் பண்ணியிருக்கிறார்.

த்யாகப்ரம்ஹத்தையே குருவாக உபாஸித்து அதனால் திவ்யமான கானத்தில் ப்ராவீண்யம் பெற்றவர். நாமாவளியை ராகங்களோடு அமைத்து நாள்தோறும் த்யாகப்ரம்ஹத்தை அர்ச்சித்து வருபவர். த்யாகப்ரம்ஹத்தில் லயித்து அப்பொழுது அவர்தம் அருளால் கிடைக்கும் நாமாக்களை அப்படியே தொகுத்து வைப்பது இவர் கையாண்ட முறை. த்யானிக்கிறார் - உளம் கரைகிறார். உடனே அழகான ஸம்ஸ்க்ருதத்தில் திருநாமங்கள் தோன்றுகின்றன. இவர் உபாஸிக்கும் ஸத்குருவின் அனுக்ரஹத்தை இங்கு முழுமையாகக் காணலாம்.

நாமாவளி இயற்றுவது பூர்ணப்ரக்ஞர்களுக்குதான் ஸாத்யமாகும். பகவந்நாமாக்களைச் சொல்வதே பெருமை. அவ்வாறு நாமாவளியை இயற்றுவது ஸாதாரணமான செயலன்று. பகவானுடைய ஸங்கல்பமும், அனுக்ரஹமும் தனது கடுந்தவமும் ஆசார்யனுடைய ஆசியும் பிறவிப்பயனும் சேர்ந்தாலன்றி இது எவ்விதத்திலும் ஸாத்யமில்லை. கருவிலே திருவுடையவர்களே இதற்கு அதிகாரிகள். இக்காலத்திலே எதை எதையோ எழுதுவதும், சேராததையெல்லாம் எழுதுவதும் சொன்னதையே திரும்பத்திரும்ப எழுதுவதும் கேவலம் எழுத வேண்டுமென்று எழுதுவதும் வழக்கமாகி வருகிறது. இதற்கு முற்றிலும் நேர்மாறாக அத்புதமாக பக்திரஸ போஷமாக திவ்யநாமங்களாக இவர்தம் நாமாவளி அமைந்துள்ளது என்பது மிகையாகாது.

ஒருவரே நூற்றெட்டு, முன்னூறு, ஐந்நூறு, ஆயிரம் என்று இதுவரை யாருமே நாமாவளி இயற்றியதில்லை. ஆயிரத்தில் எல்லாம் அடங்குமே என்ற கேள்விக்கு இங்கு இடமில்லை. முதலில் தோன்றியது அஷ்டோத்-

தரசதம். ஈடுபாடு அதிகமாக ஆக த்ரிசதீ தோன்றியது. பிறகு நவநவமாக நாமாக்கள் தோன்றவே பஞ்சசதீ ஆயிற்று. மேலும் உள்ளடங்காத பக்தி இதுவும் பர்யாப்தமன்று என்று தோன்றவே ஆயிரம் திருநாமங்கள் தோன்றிவிட்டன. ஸத்குருவின் அனுக்ரஹ வெள்ளத்தை அணைபோட்டுத் தடுக்க யாரால் இயலும்! எல்லாமே போக்யமாக அமைந்துவிட்டபடியால் தனித்தனியே பெயர்களிடப்பட்டுவிட்டன. த்ரிசதீ, பஞ்சசதீ, ஸஹஸ்ரம் இவற்றைப் பூரணமாகப் பாராயணம் பணண முடியவில்லை என்பவர்களுக்கு ஒவ்வொரு நூறு முடிந்ததுமே எட்டு நாமாக்கள் இணைக்கப்பட்டன. இவ்வாறாக த்ரிசதீயில் 324 நாமாக்கள், பஞ்சசதீயில் 540 நாமாக்கள், ஆயிரத்திலும் 1080 நாமாக்கள். இவ்வண்ணம் 144 நாமாக்கள் அதிகமாய் அமைந்ததே தனி அஷ்டோத்தரசதமோ என்று கூடக்கூறலாம் போலும். ஸத்குருவுக்கு எவ்வளவு நாமாவளி ஸமர்ப்பித்தாலும் போதாது என்ற திடமான எண்ணம் இங்கு நடைபோடுவதைப் பார்க்கும் போது பக்தலோகம் வியக்காமல் இருக்கமுடியாது. திருநாமங்களை வரிசைப்படுத்தியிருப்பதும் மிகவும் உன்னதமானது. த்யாகப்ரம்ஹத்தை ஸத்குருவாகவும் ராமனாகவும் ஸங்கீதஸ்வரூபமாகவும் தனது ஸர்வஸ்வமாகவும் பாவித்திருப்பது பரம போக்யமாயுள்ளது. த்யாகப்ரம்ஹத்தை இவர் காணும் பார்வை அலாதியானது. இதுவரை இந்நோக்குப்பெற்றார் யாரும் இல்லை. ராமனாகப் பார்க்கிறார். ராமபக்தனாகப் பார்க்கிறார். பரம்பொருளாகப் பார்க்கிறார். ஸங்கீதமாகப் பார்க்கிறார். ஆசானாகப் பார்க்கிறார். ஆசை தெய்வமாகப் பார்க்கிறார். ரஸமாகப் பார்க்கிறார். தனக்கு எல்லாமாகப் பார்க்கிறார். என்னே இவரது பார்வை!

இவரது படைப்பு விசித்திரம். இவரது எண்ணங்கள் விசித்திரம். இவரது எழுத்தும் விசித்திரம். இவரது போக்கே விசித்திரம்! புலவர்கள் எண்ணியும் பார்க்கமுடியாத படைப்பு, பாரிப்பு, பூரிப்பு. தனது நிலையிலிருந்து யார் என்ன சொன்னாலும் எப்படி சொன்னாலும் இவர் மாறுவதில்லை. அசைக்கமுடியாத தன்னம்பிக்கையும் த்யாகப்ரம்ஹத்திடம் இவருக்குள்ள பக்தியுமே இதற்குக் காரணம் என்று அறியமுடிகிறது. வர்ணனைகளில் இவர் காட்டும்படியான நிலை வியக்கவைக்கிறது. 108 தந்தவேகம் 324 படி உயர்ந்தது. ஏக்கமும் உளக்கிளர்ச்சியும் 540 தோன்றச் செய்தது. பக்திக்கும் ஆசைக்கும் வரையுண்டோ! 1080 நாமாக்களை உதிர்த்தது. புஷ்பா என்ற தாமரை மலரிலிருந்து 1080 தளங்கள் த்யாகப்ரம்ஹத்தின் திருவடிகளில் உதிர்ந்தன. என்னே!

2052 நாமாக்கள். பகவானுக்குக்கூட இவ்வளவு இல்லையே! இதில் ஒரு அதிசயம். வந்த சொல் வரக்கூடாது என்ற பிடிவாதமும் தென்படுகிறது. நாமாக்கள் நவநவமாக மிளிர்கின்றன. இது முனிவர்களுக்கும் ஸாத்யமாகாத படைப்பு.

பக்திநயம் என்ற வேரில் கிளம்பி, பாவநயம் என்ற கப்பும் கிளைகளும் கொண்டு ராகநயம் எனும் பூக்களை உதிர்க்கும் புஷ்பாவின் படைப்பு அதிசயம். புலவர்களுக்கும் புல்லரியச்செய்யும் பாணி. வீணைமீட்டும் மங்கையின் நடனம் வீணைமீட்டும் இம்மங்கையினிடம் அரங்கேறுகிறது.

இயற்கையில் இவரது அனுபவங்கள் கவிலோகத்தைக் குதூகலிக்கச்-

செய்கின்றன. இமயமலைச்சாரலில், கங்கையின் கரையினில், கடலின் தோற்றத்தில் இவர் தனது உள்ளத்தை அள்ளிக்கொடுத்து அதை த்யாகப்பிரம்ஹத்திடம் அர்ப்பணித்துள்ளார். பொதுவாக இது புலவர்களுக்கு ஒருவிதமான விளக்கத்தைத் தந்தாலும் அவரது விளக்கம் மேலும் பரம போக்யமாயமைந்திருப்பது அதிஅழகு.

இந்த நாமாவளியில் ஸம்ஸ்க்ருதத்தின் நிஜமான தன்மையைக் காணமுடிகிறது. உண்மையில் சொல்லவேண்டுமானால் இத்தகைய ஸம்ஸ்க்ருதத்தை இன்று புரிந்து கொள்ளும் புலவன் உளனா என்ற ஐயப்பாட்டினையும் உண்டாக்குகிறது. நாமாக்கள் சிறியனவாயும் பெரியனவாயும் அமைந்துள்ளன. ப்ரஸித்தமான சப்தங்கள் பல இருப்பினும் கேட்டிராத பல அத்புத சப்தங்கள் ஆங்காங்கே இடம் பெற்றுள்ளன. ஒரு உதாரணம் சொல்ல வேண்டுமானால் அமுதத்திற்கு पेत्वम् என்பதும் ஸ்வர்ணத்திற்கு सानसि என்பதும் மேகத்துக்கு मुमुचान என்பதும் பண்டிதர்களை சிந்திக்க வைக்கிறது. நாமாவளியில் நாமங்களின் அடைவு படிப்படியாகப் பெருமைகளைப் பெருக்கியவண்ணம் அமைந்துள்ளது.

அன்றியும் ஆங்காங்கு புஷ்பா என்கிற தனக்குத் தனியருள் செய்த த்யாகப்ரம்ஹத்துக்கு ச்லேஷையாக அமைத்திருப்பது மிக மிக ரஸமானது. அங்கெல்லாம் புஷ்பம் - மலர் என்ற பொருள்தான் முதலில் தோன்றும். இது ஸத்குருத்யாகராஜஸ்வாமியே ஒவ்வொரு கீர்த்தனத்திலும் த்யாகராஜநுத என்று காட்டிக்கொடுத்த வழியாமே! பல இடங்களில் சிஷ்ய, பக்த என்றெல்லாம் பொது சப்தங்களே ப்ரயோகித்திருப்பினும் தன்னிலையை உணர்த்தியிருப்பதுவாகவே சாலப்பொருத்தமாக அமைகின்றன.

ஒவ்வொன்றிலும் தொடக்கத்தில் ஒரு காயத்ரியை அமைத்திருப்பது ரஸம். இதற்குப்ரேரணைதான் முக்ய காரணம் என்று தோன்றுகிறது.

இவ்வாறாக புஷ்பா என்கிற பக்த கவிமணியின் படைப்பான இத்துதிநூலில் காணப்பெரும் பெருமைகளை உள்ளொளிகளைப் பல கோணங்களில் பார்க்கிறோம். புஷ்பா - ராகத்துடன் படைத்தது இது. ராகத்தின் மறுபெயர் பக்தி. ஆதலால் புஷ்பா ராகப் படைப்பு என்று பார்க்கும்போது இது புஷ்பராகம் என்கிற ரத்தின வகையைச் சேர்ந்தது என்பதில் ஐயமில்லை. வைரத்தில் தோஷம் ஏற்படுவதுண்டு. ஆனால் மெல்லிய உள்ளமும் திடமான பக்தி விச்வாஸமும் பல கோணங்களில் பளபளக்கும், புஷ்பாராகப் படைப்பு குற்றமற்ற, குணமுள்ள மதிப்பிடமுடியாததோர் ரத்தினம்.

அஷ்டோத்தர சத நாமாவளி, த்ரிசதீ, பஞ்சசதீ, ஸஹஸ்ர நாமங்கள் பாடியும் நேருக்குநேர் சம்போதித்து தான் அடைக்கலம் என்று சொல்ல உள்ளடங்காத பக்தி ப்ரவாஹத்தால் உந்தப்பட்டு உதித்தது இவரது சரணாகதி கத்யம் எனும் மஹா கத்யம். அத்புதமான கல்பனை வளத்தால் புலவர்களுக்கும் புதிராகப் புதிய பாணியை கையாண்டுள்ளார். பல சப்தங்கள் இவரிடத்தில் விளையாடுகின்றன என்பதில் ஐயமில்லை. பொருள் எளிதில் புரியாவிட்டாலும் செவிக்கினிய சொல்லணி மெய் சிலிர்க்கச் செய்கிறது. எடுத்தோம் பார்த்தோம் ரஸித்தோம் என்று

சொல்லி வைத்துவிடும் நூலல்ல இது!

நாமாவளிகளால் லயித்த அவர் அடங்காத பக்தியினால் அத்புதமான கத்யத்தை இயற்றியபின் தனது குருதேவனுக்கு மங்களம் பாட வேண்டாமா என்று ஏங்க, த்யாகப்ரம்ஹத்தின் ப்ரேரணையால் மங்களாஷ்டகமும் தோன்றியுள்ளது. த்யாகப்ரம்ஹத்துக்கு எவ்வளவு எழுதினாலும் போதாது என்னும் பிடிவாதம் வியக்கச் செய்கிறது. பக்தியின் பரீவாஹத்தால் தனித்ததொரு ஸ்வானுபவத்துடன் இயற்றப்பட்ட இம்மங்களம் மிகவும் உயர்ந்தது. இவ்வத்புதமான அஷ்டகத்துடன்

पुष्पानुराग संगीतं त्यागराजार्य मङ्गलम् ।
ये गायन्ति सदा भक्त्या तेऽपि मङ्गल भाजनम् ॥

என்று சேர்த்து அனுஸந்திப்பது ஸர்வமங்களத்தையும் உண்டாக்கும் என்பது திண்ணம்.

இவ்வாறு அஷ்டோத்தரசதம், த்ரிசதீ, பஞ்சசதீ, ஸஹஸ்ரம், சரணாகதிகத்யம் என்று ஐந்து ரத்தினங்களை மங்களாஷ்டகம் என்னும் புஷ்பவர்ஷத்துடன் பஞ்சநதக்ஷேத்திரத்தில் தோன்றிய த்யாகப்ரம்ஹத்துக்கு ஸமர்ப்பித்து நிறமும் மணமும் பெறுகிறார் ஸ்ரீமதி புஷ்பா ஸ்ரீவத்ஸன். இவருடைய பாக்யம் இவருடைய ஞானம் - இவருடைய பக்தி - இவருடைய வ்யவஸாயம் நம் மனதிற்கும் வாக்குக்கும் எட்டுவதில்லை.

மனுஷ்யாணாம் ஸஹஸ்ரேஷு............... கஸ்சித் மாம் வேத்தி தத்வத: என்றான் கீதாசாரியன். கீதாசார்யனான த்யாகப்ரம்ஹத்தை உண்மையில் அறிந்தவர் ஸ்ரீமதி புஷ்பா ஸ்ரீவத்ஸன்.

த்யாகராஜரின் க்ருதிகளைப் பாடலாம். அவருக்கு மண்டபங்கள் கட்டலாம். அவரை தெருக்களில் எழுந்தருளப்பண்ணலாம். அவருக்கு கோடிக்கணக்கில் பணத்தை அர்ப்பணம் பண்ணலாம். ஆனால் அவை எல்லோருக்கும் எல்லோராலும் செய்யப்படுவையே. தனிப்பெருமையும் வைலக்ஷண்யம் தோன்றுவதில்லை! **ஆனால் ஸ்ரீமதி யோகிச்ரேஷ்டையான புஷ்பாவின் படைப்பு சாச்வதமானது. நிகரற்றது. பிறரால் சிந்தித்துப் பார்க்கக்கூட இயலாதது என்பது ஸத்யம்.**

இவரை வெளியே காணவில்லை. பகட்டில்லை, பற்றில்லை, படாடோபமில்லை, பாசமில்லை, நேசமில்லை, ஸம்ஸார பந்தத்திலும் பற்றில்லை, ஆனால் இவருக்கு த்யாகப்ரம்ஹம்தான் உண்ணுஞ்சோறு பருகும் நீர், தின்னும் வெற்றிலை எல்லாம் கண்ணன் என்கிற கணக்கிலே அமைந்து விட்டது. த்யாகப்ரம்ஹத்தைக் கெஞ்சுகிறார். உடனே கொஞ்சுகிறார். சில ஸமயத்தில் மிஞ்சுகிறார். ஏகலைவன் மாதிரி தியாகப்ரம்ஹத்தை உபாஸித்து ஸாக்ஷாத்காரமும் பெற்று விட்டார் என்றே சொல்லலாம்.

பக்தியின் பரீவாஹமாக இந்த ரத்தினங்கள் அமைந்தன. இவை சிந்தாமணிகள். த்யாகப்ரம்ஹமே பெற்றுக்கொண்ட பெரும் புதையல். ஸங்கீத லோகத்திற்கு இதுவோர் வரப்ரஸாதம். தெரதீயக ராதா என்று வேண்டினார் அன்று. த்யாகப்ரம்ஹத்தின் பக்தி திரையை திறப்பது

போல் புஷ்பா என்கிற பக்தையைக் கொண்டு த்யாகப்ரம்ஹத்தை உலகம் உணரட்டும் என்று திரையை திறந்து அத்புதமான இந்த அஞ்சு ரத்தினங்களையும் தானே வெளியிட்டு மகிழ்கிறன் போலும். திருவேங்கடமே திருக்கோவலூரே என்று இணைத்துப் பேசினார் திருமங்கை மன்னன். தொடர்பு புரியவில்லை. இன்று இதை ஒருவாறு உணர்கின்றேன். திருக்கோவலூர் தேவியின் அருள் திருநாமம் பெற்ற ஸ்ரீமதி புஷ்பாவைக் கொண்டு பூவின் மணமென்னலாம்படி அவரிடம் தோன்றிய பஞ்சரத்தினங்களை நான் தானே வெளியிடவேண்டுமென்று உத்ஸாகத்துடன் திருவேங்கடமுடையோன் ஸாமகானலோலன் முனைந்துள்ளான். இதைக் காட்டிலும் இதற்கு வேறு சாக்ஷியோ அத்தாட்சியோ தேவை இல்லையே!

ஸ்ரீமதி புஷ்பாவின் படைப்புக்களில் வற்றாத ஸங்கீத ஊற்று உள்ளது. ஸங்கீதத்திற்கு மணம், ஸங்கீதயோகத்திற்கு நிறமாய் ஸ்ரீத்யாக ப்ரஹ்மத்திற்கு பலமாய், உலகுக்கு என்றும் அகலாத அருட்சுனையாய் இவை விளங்கட்டும். இவை ஸமீபத்தில் திவ்யநாம பஜனத்துக்கு ஏற்கப்பட்டு உலகம் பெருமை அடையட்டும்.

இவற்றை நாட்டுக்கு நல்கிய ஸ்ரீமதி புஷ்பா ஸ்ரீவத்ஸன் ஸகல ஸௌபாக்யங்களையும் பெற்று பல்லாண்டு பல்லாண்டு பெருவாழ்வு வாழட்டும் என்று திருவேங்கடமுடையானை இறைஞ்சுகின்றேன்.

இதைக்கண்டுகளிக்கும் வாய்ப்புதந்த அவர்தமக்கு தன்யவாதத்தையும் ஸமர்ப்பித்துக்கொள்கிறேன்.

பக்த ஸங்கீதலோகமே - என்னே உனது பாக்யம்!

தேசிக பக்தரத்னம்
ஸ்ரீநிவாஸ ராகவாசாரியார்
26-4-93 ஸேவா ஸ்வாமி.

# ரஸானுபவம்

ஒவ்வொன்றாக இந்நாமாவளியின் பெருமையை எடுத்துச் சொல்வது ச்ரமஸாத்யம். சில இடங்களில் கேட்டதற்கு அத்புதமான ஸமாதானத்-தைப் பெற்றேன். உதாரணத்துக்காக ஒரு இடம் சிஷ்ய மனோநாச காரகாய நம: என்பது. சிஷ்யர்களின் மனதை அழியச் செய்பவர் என்று பொருளாகாதா, இது தகுமோ என்றேன். மனோநாசம் என்ற நிலை ஏற்பட்டால்தான் ப்ரம்ஹானுபவம் ஏற்படும் என்று கூறியபோது உண்-மையில் அதிர்ச்சி அடைந்தேன். மேலும் தன்னை மனதில் கொண்டே இந்நாமாவை எழுதியதாகவும் அறிந்தேன். இவ்வண்ணம் இன்னும் சில இடங்களை ஸமர்த்தித்த பாங்கு உண்மையான புலமையையும் அளவற்ற ஆத்ம விச்வாஸத்தையும் தெளிவாக்குகிறது.

ஒவ்வொரு நாமாவும் பரமபோக்யமாயும் அதி அத்புதமாயும் சொல்-லுக்கப்பாற்பட்டதாயும் விளங்குவதால் சிலவற்றைக் குறிப்பிட்டு சிலவற்-றைக் குறிப்பிடாமல் விடுவதா என்ற நிலை. 'அற்புதமான ச்ருஷ்டி' என்று இரண்டே சொற்களில் முடித்துக்கொள்ளலாம். நான் கண்-டனுபவித்ததைப் பகிர்ந்து கொள்ளும் வகையில் சிலவற்றை மட்டும் குறிப்பிடுகிறேன். முழுதும் இந்நாமாவளியின் பெருமையைச் சொல்-வது அஸாத்யம். ஆராய்ச்சியினாலேயே அறிய இயலும். ஒரு சில ரஸங்களை மட்டுமே குறிப்பிடுகிறோம் - விரிவுக்கஞ்சிய நிலையில்.

### அஷ்டோத்தரசதம் :

காயத்ரியில் த்யாகராஜாய வித்மஹே நாத்ப்ரம்ஹணே தீமஹி தந்ந: ஸத்குரு: ப்ரசோதயாத் எனப்பட்டது. இதை விளக்கும் பாணியில் முதல் திருநாமம் நாதப்ரம்ஹாவதாராய நம: என்று அமைந்தது. முடிவில் ஸ்ரீத்யாகப்ரம்ஹ ஸத்குரவே நம: எனப்பட்டது. ஆதலால் அஷ்டோத்-தரத்தின் சுருக்கம் அந்த காயத்ரீ என்று தெளிவாகிறது. 107வது திருநாமமும் ஸாக்ஷாத் பரப்ரமஹணே நம: என்று அமைந்ததும் அழகு.

ஸ்வரூபம் ரூபம் குணம் விபவம் ஐச்வர்யம் என்ற வரிசையில் நாமாக்கள் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. ஸத்வமூர்த்தயே (22) ஸ்ரீராமபக்தி ஸாம்ராஜ்ய சக்ரவர்த்திநே நம: (33) பாவந ஸஞ்சரிதாய நம: (47) ஸாக்ஷாத் ஸஸ்வரதேவதாயை (50) ச்ருதி சாஸ்த்ர விசாரதாய நம: (60) மோக்ஷமார்கதர்சகாய நம: (97)என்கிற நாமாக்கள் அமைந்திருப்பது அழகு.

### த்ரிசதீ :

த்ரிசதியில் ஒவ்வொரு நூறிலும் ஒவ்வொரு விசேஷம் இடம் பெற்-றுள்ளது. ராமராமாய வித்மஹே நாமரூபாய தீமஹி தந்ந: த்யாக: ப்ரசோதயாத் என்கிற காயத்ரியுடன் தொடங்குகிறது த்ரிசதீ. இதில் அத்வைதஸித்தி ப்ரதானந்த குரவே என்று தொடக்கத்திலேயே ஆனந்த

குரு என்பது காம்பீர்யத்தைக் காட்டுகின்றது. பல இடங்களில் சிஷ்ய சப்தம் ப்ரயோகிக்கப்பட்டிருந்தாலும் தனக்கு சிஷ்யை என்ற நிலையை வலியுறுத்துவதாகவே அமைகின்றது. இங்கும் அழகான பதப்ரயோ- கங்கள் மனோஜவஸ - வ்யூத - ஆதூசிதாய - ப்ரணேநீ - வரூத்ரே ரேபிணே, வரூத, குநாபயே என்பவை விரலப்ரயோகங்கள். பூரணமாக முதல் நூறில் குரு சிஷ்யபாவத்தை மையமாகக் கொண்டு நாமாக்கள் தோன்றியுள்ளன. ஆதலால் கடைசியில் ஸத்குருஸ்வாமிநே நம: என்று முடிக்கப்பட்டிருக்கிறது என்பதை எளிதில் உணரலாம். இங்கும் புஷ்ப சப்தத்தில் வாஸனையுள்ளது. புஷ்ப - ஆபூஜித - புஷ்பாபூஜித என்பன போன்ற பல நாமாக்கள். கவி மரபும் பக்தியின் மிகுதியும் இவ்வாறு அமைப்பதை பலப்படுத்துகின்றன. சிஷ்யாத்மதீபாய, சிஷ்ய ஹ்ருந்மந்- திராய சிஷ்ய சித்த நீராஜிதாய என்பதும் சரீரவ்யதா விமோக்த்ரே என்பதும் அனுபவபூர்வமாக அமைந்த நாமாக்கள் என்னலாம். இவ்வாறு ஒவ்வொரு நாமாவும் தனிப்பொலிவுடன் விளங்குகின்றது.

இரண்டாவது சதகத்தில் ஒருசில ரஸங்கள்:- ஸ்ரீராம நாமத்துடன் இணைந்தே நாமாக்கள் அமைந்துள்ளன. ஸங்கீதக்ஞான ஸௌர்யன் என்று தொடக்கம். முன் அஷ்டோத்தரத்தின் முடிவில் ப்ராக்ஸந்த்யா எனப்பட்- டது. ஸ்ரீராமப்ரியாய நம: என்பது ராமனுக்கு ப்ரியமானவர் என்று பொருளுடன் மேல்கோட்டையில் உள்ள பகவானுக்கு ராமப்ரியன் என்றே பெயர் என்பதையும் உணரலாம். இங்கு ஒரு ரஸம் 137ல் பூர்ணமான சப்- தங்கள் ஒவ்வொன்றாக குறைந்து கொண்டே வந்து ராமப்ரியன் என்று முடிவதில் ஸங்கீத சாஸ்திரத்தில் கையாளப்படும் ஒரு கைவரிசையை (ஹஸ்தலாகவம்) கவனிக்கலாம். இது ஒரு ராமநாமாஷ்டோத்தரசதம் என்றே சொல்லலாம். ஒரு இடத்தில் தான் ரகுவர எனப்பட்டது. அத்- புதமாய் அமைந்துள்ள சில நாமாக்கள்; பாபவிராம ஸ்ரீராமநாமாவிராம காநாராமாய நம: என்கிற 176வது நாமம் வெகுவெகு அழகு. பாபத்- துக்கு விராமம் நாமத்திற்கு அவிராமம் - கானத்திற்கு ஆராமம் என்கிற அமைப்பு பரமபோக்யம். திகம்பர ஸ்ரீராமாவரண திவ்யவாகம்பராய நம: என்பது எப்படி என்பதற்கு ஸ்ரீத்யாக ப்ரம்ஹமே திகம்பர என்று கூறி- யிருப்பதை நினைவுபடுத்த என்று தெரிகிறது. அடுத்தபடியாக சிதம்பர எனப்பட்டதும் ரஸம், இதிலும் அத்புதமான பதப்ரயோகங்களைக் காண- முடிகிறது - ஸௌரப்யான - ஸந்தாநித-பேத்வவர்ஷக - முமுசாந - மந்தாக - அவரோகி - புங்ககார - ஸௌரேப - தீதி - ரீண - க்ருத்ஸ முதலானவை. ராமராமாய வித்மஹே என்கிற காயத்ரியில் கூறப்பட்டது இந்த இரண்டாவது சதகத்தில் எல்லா நாமாக்களும் ராமநாமத்துடன் விளங்குவதால் விளக்கப்பட்டது என்பதும் ரஸம்.

இனி மூன்றுவது சதகத்தின் அமைப்பினைப் பார்ப்போம். ராமக்- ருஷ்ண காநானந்தாவதாராய நம: என்பது தொடக்கத்திலேயே ஆனந்தம் இடம்பெற்றது. சில நாமாக்களின் அமைப்பின் அழகை இங்கு குறிப்- பிடுவோம். க்ருஷ்ணன் விஷயமாக அமைந்த நாமாக்கள் பல. பாக-

வதஸமூஹத்திற்கு குன்றின்மேலிட்ட விளக்காய் விளங்குபவர் என்பதை அத்ரிதீபாய எனப்பட்டது. இங்கு நாமாக்களில் சப்தாவ்ருத்தி மிகவும் ரஸமானது. யாதவகுலதிலக காயகதிலகாய, நுதகீத பரமேசநுதகீதாய; கிரீச மனோஹர மனோஹர கிரீசாய; விநுதவாகதிபவிநுதவாகதிபாய; ரஸிகாக்ரேஸர ஸ்ரீராம ரஸிகாக்ரேஸர, பூஜாலோலபூஜாலோலாய, தாரா-தீச..... ஸ்வராதீச, வரிவஸிதவர வீர வீரவர தீரதீர ஸ்வராய, உரகராஜ - ராகராஜாய, மதநஜனக மோதந மதுர கீர்த்தன ஜனகாய; தராதிப..... ஸ்வராதிபாய என்பன போன்றவை மனதின் பக்வநிலையையும் உத்ஸா-கத்தையும் எடுத்துக் காட்டுகிறது. நவரஸ நிசயீ க்ருதிநிசயாயநம என்-பது ஸ்வானுபவத்தை தெளிவாக விளக்குகிறது. 277வது நாமமானது மிகவும் போக்யமானது - பக்தியில்லாத ஸங்கீத வித்வான்களின் கூட்டத்-திற்கு வெகு தூரத்தில் உள்ளவர் என்பது அவர்தம் கூறிய கருத்தினை அழுத்தமாக உணர்த்தும் பாங்கில் அமைந்தது. 278 முதல் அமைந்த நாமாக்கள் மிகமிக போக்யமானவை. 293 முதல் மரம் என்றும் நிழல் தரும் மரம் என்றும் கூறியதும் மேல் ஸ்வர்ண கங்கை, வாக் கங்கை குரு கங்கை என்று கூறியதும் 312 முதல் 317 வரை புஷ்ப(ா) சப்த ப்ரயோகமும் ஈடுபாட்டின் மிகுதியை குறிக்காமல் இருக்காது. 317வது திருநாமம் ரக்தானுராகஸ்துதிபுஷ்பாலயதைவதாய என்பது ரஸம். புஷ்-பாலய என்பதைக் கவனிக்கவேண்டும். துதி மலர்களால் அமைந்த கோயில் என்று பொருள் கொடுக்கப்பட்டிருந்தாலும் உட்பொருளை நோக்-கின் அநுராகத்தினால் மனம் கனிந்த புஷ்பா எனும் ஆலயம் என்பதும் சாலப்பொருத்தமாக அமைகிறது. தானே அவருக்கு , ஆலயம் எனபதில் தான் எவ்வளவு பெருமை. புஷ்பாலயம் என்றால் லதாக்ருஹம் என்பது பொருள். அனுராகம் ஏற்பட்டால் லதாக்ருஹம் போக்யம்தானே! 7வது திருநாமாவும் இதை நினைவூட்டுகிறது. இவ்வாறு ஒவ்வொரு நாமாவும் ஸ்வானுபவ பூர்வமாக ஹார்தமாக, அத்புதமாக, த்யாகராஜரத்னத்தைப் பல கோணங்களில் எடுத்துக் காட்டுவதாக அமைந்த இந்த நாமாவளி-யில் பொதிந்து கிடக்கும் பொருளின் பெருமை சொல்லுக்கு அப்பாற்பட்-டது என்பதை அனுபவித்து இவ்வண்ணம் தொகுத்துரைக்கும் பாக்யம் பெற்றேன். நறுமணமுள்ள மலர்போல் என்றும் வாடாத இப்புஷ்பாம-லர் த்யாகப்ரம்ஹத்திற்குப் பெருமணம் தந்து பெருவாழ்வு வாழச்செய்வது உறுதி உறுதி உறுதி.

## பஞ்சசதீ

முதல் சதகம் : பஞ்சசதியின் அமைப்பினைச் சிறிது பாரப்போம். ஐந்து நூற்றெட்டுக்கள் இருப்பதால் இவற்றை முதல் சதகம் இரண்டா-வது சதகம் என்ற முறையில் வகுத்து அறிவது நலம்.

இதற்கு காயத்ரியில் அமைந்தது குருதேவாய என்பதும், முதலில் பஞ்சநதக்ஷேத்ர ஸஞ்சரித பரம குரவே நம: என்பதும் இடத்தைச் சுட்டிக் காட்டி குருதேவன் யார் என்பதை விளக்கும் முறையில் அமைந்தது. தொடர்ந்து திருமேனி வர்ணனம் இடம் பெறுவது ரஸம். 19, 20 நாமாக்-

கள் இவரது கனிந்த பக்தி நிலையைப் புலப்படுத்துகின்றன. குருவின் செயல் ஸந்தேகத்தைப் போக்குவதே. இது 24வது நாமத்தில் ஸம்சயச்சிதே எனப்பட்டது. எந்த விதத்தில் குரு என்பதை 36 நாமாவில் - ஸ்வரஸமுத்ரபார தர்சயித்ரே எனப்பட்டது. 43வது பெயர் அத்புதமாய் அமைந்துள்ளது. அனன்யோபாஸிகாயா: க்ஷணமப்யபரோக்ஷாய நம: என்பது எப்பொழுதும் தன் கண்முன்னே த்யாகராயர் காக்ஷியளிப்பதைக் காட்டுகிறது. அன்றியும் ஸஹஸ்ர நாமாவளியின் முடிவில் ஸத்குரோ: அனன்யோபாஸிகயா புஷ்பயா என்று கூறுவதால் இதற்கு விளக்கம் கூறப்பட்டது போலும். 60வது திருநாமத்தில் அநிர்வசநீய ஸ்வாதுமய வாக்ப்ரபாவாய நம: என்பது த்யாகராஜ கீர்த்தனையின் ப்ரபாவம் கூறப்பட்டது போலும். வாக்கின் இனிமை வாக்குக்கு எட்டவில்லையே என்பது ரஸம். 65வது நாமாவில் நவரத்னங்களைக் காணமுடிகிறது. ஸ்வர-ராக-லய-க்ஞான-பக்தி-வைராக்ய-பாவ-ஆனந்த--நாத-நவரத்ன கசித ஹாடக ஹ்ருன்மண்டப ஸ்ரீராமத்யானாபிநிவிஷ்டாய நம: என்கிற இடத்தில் ஒன்பது விஷயங்கள் குறிப்பிடப்பட்டன என்பதும் ரஸம். 70வது திருநாமம் புலவர்களை மோகிக்கச் செய்கிறது. இந்த நாமாவின் ரஸம் அவர் சொன்னபிறகுதானே புரிந்தது! யாந்த பூாந்த நுதி தூாந்த - தூாந்த நிசாந்தாய நம: என்பதில் ரஸம் கவனிக்கவேண்டும். யாந்த - என்பது ரா வையும், பாந்த ம வையும், அவ்வாறே தாந்த -என்பது நாவையும் தாந்த என்பது த என்பதையும் குறிக்கும் என்பது ஆழ்ந்த புலமையைக் காண்பிக்கின்றது. 84 ல் ப்ரக்ஞான ஸௌர்ய என்பதும் 91ல் மநச்சுத்திரஹித பூஜாதிரஸ்கர்த்ரே என்பதும், 92ல் ஸுசுத்தமானஸபுஷ்பார்ச்சன ஸ்வீகர்த்ரே என்கிற இடத்தில் தன்னையும் சுட்டிக்காட்டுவதும் ரஸம். 93ல் மௌனத்தை அகற்றுபவர் தானே ஸத்குரு. இவர் மனோமௌனகர ஸத்குருவாய் விளங்குகிறுர் என்பதும் விழிப்புணர்ச்சியை உண்டுபண்ணுகிறது. இவ்வண்ணம் 103ல் தனக்கு அவர்தான் சொந்தம் அல்லது தன்னையே சொந்தமாக உடையவர் என்றும் உணர்த்துவது ரஸம். இவ்வண்ணம் பல அபூர்வமான உல்லேகங்களைக் கொண்டது பஞ்சசதியில் முதல் சதகம்.

இரண்டாம் சதகம் : அத்வைத ஸாராய என்று தொடங்கி டௌகித நாதப்ரம்ஹானந்த த்யாக ப்ரம்ஹ குருநாதாய நமோ நம: என்று இரண்டாவது சதகம் நிறைவு பெறுகிறது. அகாரத்தில் தொடங்கி வரிசையாக வர்ணக்ரமம் 4 சதகத்திலும் கையாளப்படுகிறது. அத்புத ஸாராய என்று தொடங்காமல் அத்வைத ஸாராய என்பதில் நிகரில்லாத ஸாரமாய் விளங்குவர் என்பதாகும். இது ரஸம். இங்கு ரிக்மிய என்பது அபூர்வசப்தம். 12 நாமாக்களுடன் உயிர் எழுத்துக்களின் தொடர்ச்சியில் ஈச்வரதர்சகாய, ஏகப்ரம்ஹணே, ஓங்கார ஸ்வரரூபிணே என்பவை ரஸமானவை. அத்வைத என்று தொடங்கி ஔபநிஷதஸார என்று முடிப்பதும் பரமரஸம். பிறகு க காகிகீ என்ற அடைவில் 12 நாமாக்களை முடித்து க்ர என்று ஸம்யுக்தாக்ஷரத்தில் ஆரம்பித்து 17 நாமாக்கள். (125)ல் குலதந ஸ்ரீராமாவ்ருத்த ஜீவநாய என்பதும் (131) கோகில கான புஷ்பாஞ்ஜலி-

பாக்ய ப்ரதாய என்று தனது பாக்யத்தைக் கூறுவதும், 134 க்ராந்ததர்சீ (கவி) என்பதும் (147) க்ஷேமங்கராய என்பதும் 161ல் குருதேவாய என்பதும் 173 நாமாவில் கவர்கம் முடிவு பெற்றது. 205 வரை சவர்கம் முற்றுப்பெறுகிறது.

205 முதல் டவர்கம். இதில் 12 நாமாக்கள். 207வது நாமம் டிப்பணீபூத என்பது ரஸம். டௌகித - டேபித முதலான சப்தங்கள் ரஸமானவை. குருதேவனிடம் பெற வேண்டியது வர்ணக்ரமம் தான். ஸங்கீதத்திலும் வர்ணக்ரமம் உண்டு. ஆனால் இங்கு கையாளப்படும். வர்ணக்ரமம் விலக்ஷணமானது. இம்மாதிரி அமைப்பதும் ஒரு புதுமையே.

மூன்றாவது சதகம் : இதற்கு முன் முடிவில் நாதப்ரம்ஹ எனப்பட்டது. இப்பொழுது தவர்கத்தில் மூன்றாவது சதகம் தொடங்குகிறது. தந்த்ரீ ஸ்வர ஸ்வராய என்பது முதல் நாமா. ப வில் முடிகிறது. இதில் அக்ஷரஸ்வாரஸ்யம் ஒருபுறமிருக்க, நாமாக்களின் அமைப்பு அதி அழகு. 4ல தீர்த்தீக்ருத பஞ்சநதக்ஷேத்ராய என்பது தீர்த்தீகுர்வந்தி தீர்த்தாநி என்ற ப்ரமாண வசனத்தை நினைவூட்டுகிறது. 226வது திருநாமமாக தோயாத்மநே என்பது அவரே தீர்த்த ஸ்வரூபம் என்றும் சுட்டிக்காட்டுவது ரஸம். 232 த்ரிதாபரஹிதாய என்பது மற்றவரை விட வைலக்ஷண்யம் காட்டுவதாய் அமையும். 243வதில் த்ருடபக்த ஸ்வீயாய என்பது தன்னையே குறிப்பது. 251ல் தன்னிலை குறிப்பிடப்பட்டது. 253லும் அவ்வாறே. த்ருவஸங்கீத ஸித்தயே என்பதும் 288ல் ராக தைவதம் என்பதும், 299ல் புண்யரூப ஸ்ரீராம தர்சனானந்த புண்யரூபாய என்பதும் 311ல் ப்ரிய பாஷிணே என்பதும், 312ல் ப்ரியங்கர குருநாதாய என்பதும் 315ல் ப்ருஷித மாநஸபுஷ்பாவச்யாய என்பதும் 324 பணிநாத தல்பக ஸாந்நித்யக கானநாத ஸ்ரீத்யாகராஜகுருநாதாய என்பதும் பரமரஸமான நாமாக்கள்.

தந்த்ரீஸ்வர ஸ்வராய என்று தொடங்கி கானநாத என்று முடிப்பதும் ஒரு அழகு. த்யாகராஜ கீர்த்தனங்களைக் குறிக்கும் வகையில் த்ராக்ஷா பாக ஸாம்ஸித்திக ஸுகீர்த்தன பாவகாய நம: எனப்பட்டது. அனுபவ பூர்வமான குறிப்பு. இவ்வாறு எவ்வளவோ சொல்லலாம்.

நான்காம் சதகம் : தொடக்கமே ரஸம் பலதாத்ருஸத்குரவேநம: என்று நான்காவது சதகம் தொடங்குகிறது. 328ல் பலித பரப்ரம்ஹம் எனப்பட்டது. புத்தியோகோபாச்ரித பக்த சித்த ஸததாச்ரிதாய என்கிற பொழுது தன்னைக் குறித்துக் கொள்வதில் நோக்கு இருப்பதாகத் தெரிகிறது. போதகுரவே, ப்ரம்ஹக்ஞாநிநே, ப்ரம்ஹஸ்வரூபாய ப்ராம்ஹ முஹூர்த்த நாதோபாஸன ப்ரியாய, பிந்நஹ்ருத்பிஷஜே என்ற வரிசையும் ரஸம். பிந்நஹ்ருத் பிஷஜே என்பதற்கு மனம் உடைந்து நிற்பவருக்கு மருந்தாய் உள்ளார் என்று கூறுவது அனுபவ பூர்வகமானது என்று அறியமுடிகிறது. 350வது நாமம் பைரவி ராகத்தைக் குறிப்பிட்டது பைரவியின் காம்பீர்யம் மனதில் ஊன்றியிருக்கிறது என்பதையும்

காட்டுகிறது.

364வது நாமாவில் தனக்ரேயுரியதான குறிப்பு போக்யமானது. தன்னை மூகவச்சிஷ்ய என்பதும், அவளைக் கொண்டு பஞ்சசதீ எழுதிக்-கொண்டது பெருமை என்பதும், இதனால் அர்ச்சிக்கப்பட்ட குரு என்பதும் கவிமரபிற்குச் சேர மிக மிகப் பொருத்தமானது. அதே சமயத்தில் த்யாக-ராஜரை மௌனகுரு என்பதும் ரஸம். குரோஸ்து மௌனம் வ்யாக்யானம் சிஷ்யாஸ்துச் சிந்ந ஸம்சயா: என்று தக்ஷிணாமூர்த்தி விஷயமாக கூறப்-பட்டது இங்கு இவள் விஷயத்தில் பொருத்தமாக அமைந்தது எனலாம். 380ம் ரஸம், 383, 384ல் ராகஹரனாயிருப்பவரே ராகவரதன் என்பது கவியின் உளப்பாங்கிற்கு ஓர் உதாரணம். 398ல் ரோகஹரராக நிர்ஜ்ஜராய நம: என்பது ராகத்தின் பெருமையை உள்ளபடி உணர்த்துகிறது. 408 வாக்வரதாய நம: என்பது தனக்கு வாக்கு அவரது வரப்ரஸாதமாக கிடைத்தது என்பதை உணர்த்துகிறது. 409 வாசாம் அகோசராய நம: என்று வியப்பினை உணர்த்துகிறது. 432ல் வேதஸார ஸ்ரீராம நாமநாத ஸாராய என்பது மிகவும் அழகு. சௌப ஸ்ரீத்யாகராஜ ஸ்வாமிநே நமோ நம: என்று நான்காவது சதகம் முடிக்கப்பெற்றது.

இதில் பல அபூர்வமான சொற்கள் இடம் பெற்றுள்ளன.

**ஐந்தாவது சதகம் :** தொடக்கத்திலேயே ஸப்த ஸ்வர மூர்த்தி ஆளப்படுகிறது. நாமாவளியில் நாமாக்கள் ஒவ்வொன்றையுமே குறிப்பி-டலாமெனும்படி அதி அழகு. பாவகம்பீரம், கவியுள்ளத்தின் மென்மை, வாக்வளம் இவற்றை வியக்கும்படி பூரித்து நடைபோடுகின்றன. ஒவ்-வொன்றின் பெருமையினையும் எடுத்துச் சொல்வது இயலாத காரியம் - ஒவ்வொரு நாமாவையும் உணர்ந்து அனுபவித்தே புரிந்துகொள்ள இயலும். ஸ்வானுபவ பரீவாஹமாகிய இந்நாமாவளியில் ஒவ்வொரு திரு-நாமாவும் பட்டை தீட்டிய வைரமாய்ப் பலகோணங்களில் ஜ்வலிக்கிறது. 515ல் ஹேமகும்ப ஹ்ருத்பூர்ணனுராக மத்வர்ப்பிதாய என்பது குருவிடம் கொண்ட அநுராகத்தினைக் காட்டுகிறது. 460 ஸங்கீத ஸத்மநே நம: 508ல் ஹாஸ்யரஸானுவித்த நிந்தாஸ்துதிராஜாயநம:, 511ல் ஹ்ருத்கத ஸத்-குரவே நம:, 512 ஹ்ருதயபூர்வ பக்தி புஷ்பாஞ்ஜல்யாமோதிதாய நம:, 516 முதல் 526 வரை ஸ்வானுபவத்தை விவரித்து 527 முதல் நாதமயமான குருவிடம் லயிக்கிறார். 540 நாதப்ரம்ஹானந்த ஸத்குரு ஸ்ரீத்யாகராஜ ஸ்வாமிநே நமோ நம: என்று இனிதே முடிக்கப்பெற்றது. மிகவும் ரஸ-மான ஸ்தோத்ரம், கம்பீரமான சைலி அழுத்தமான பக்தி. ஆழமான ஸம்ஸ்க்ருத க்ஞானம். குருவை உருக வைக்கும் படைப்பு. புலவர்களை மயக்குவிக்கும் விநோதம். தெய்வீகமான வாக்கு.

## ஸஹஸ்ரம்

ஸஹஸ்ர நாமாக்கள் பகவானுக்கு உண்டு. எலலா நாமாக்களும் அவ-னுடைய குணங்களை - அவற்றை வெளியிடும் சரிதங்களை ஆதாரமாகக் கொண்டவை. அவற்றை பீஷ்மர் யுதிஷ்டிரருக்கு உபதேசித்தார். உல-

கங்கள் சேமமாக வாழவே ஸஹஸ்ரநாமம் தோன்றியது. பேருமோர் ஆயிரம் உடையன் என்று ஆழ்வாரும் இதை அறுதியிட்டார். ஆயிரநாமாக்களைத் தொகுப்பது என்பது மஹா மஹாவித்வான்களுக்கும் சுலப ஸாத்யமில்லை. புனருக்தி சர்வித சர்வணம் என்கிற குறைகள் சிலவற்றில் குறைவாகவும், சிலவற்றில் அதிகமாகவும் இருக்கும். இது இயல்பு.

இருக்கிற ஸஹஸ்ரநாமத்தைச் சொன்னாலே பாபம் தாபம் சாபம் போகும். வேண்டியவை கிடைக்கும் என்பது தான் இன்றைய உலகநிலை. இவ்வாறிருக்க ஆசார்ய தேவோ பவ என்ற சாஸனத்தின்படி ஆசாரியனை தெய்வமாக உபாஸிப்பது பெயரளவுக்கு என்றிராமல் ஆசார்யபக்தியின் மேலீட்டால் செய்வதெல்லாம் போக்யமே என்ற நிலை இவரது. வரவேற்கப்பட்டதும் கூட.

மனக்கண்ணைத் திறந்து வைத்து ஆன்மவொளியை ஏற்றி வைத்து ஆனந்தத்தில் மிதக்கச் செய்யும் ஆசார்யனுக்கு எதைத்தான் செய்யக்கூடாது. பக்தியின் தாரதம்யத்துக்கு ஈடாக செயல்கள் அமைகின்றன. ஓர் கைம்மாறு மாயனும் காணகில்லான் என்பர் வேதாந்த தேசிகர்.

இவ்வண்ணம் ஸ்ரீத்யாகப்ரம்ஹத்தையே அல்லும் பகலும் உபாஸித்து அவரே எல்லாம் என்கிற எண்ணம் கொண்டு பக்தியின் பரீவாஹமாக ஒரு பரம பக்தையின் ஆர்த்தநாதமாக, ஆனந்தநாதமாக நாதப்ரம்ஹத்துக்கோர் நாதாராதனமாகத் தோன்றியுள்ளது இந்த ஸஹஸ்ரநாமம். இது பூந்தோட்டத்தில் பூத்துக்குலுங்கும் மலர்மாரி போல் புஷ்பா எனும் நந்தனவனத்தில் பூத்துக்குலுங்கும் வாடாமலர்களாய் உளத்தாபத்தையகற்றும் மணம் கமழும் மந்தமாருதமாய் அமைகின்றது. இது அதிசயோக்தியல்ல.

இவரது ஈடுபாடு விசித்திரம். முதலில் 108 நாமாக்களைத் தொகுத்தார். ஒன்றுக்கு மூன்று என்பது போல் த்ரிசதி ஏற்பட்டது. பஞ்சநத க்ஷேத்ரத்துக்கு ஒரு பஞ்சசதீ வேண்டாமா! அதுவும் பூர்த்தியாயிற்று. அனன்ய பக்தியுடன் இவர் உபாஸிக்கும் ஸத்குருவின் ஸங்கல்பமும் இணைந்தது. ஆயிரத்துக்கும் மேற்பட்ட திருநாமாக்களைப் பொழிந்தார். 5.3.1 என்று சேர்த்தாலும் கொஞ்சம் நாமாக்களை சேர்த்தாலே ஆயிரம் ஆகிவிடாதோ என்று தோன்றவில்லையே! ஒன்றிலோ மூன்றிலோ ஐந்திலோ வராத நாமாக்களை ஏன் தொகுக்கலாகாது என்ற எண்ணம் இவரைத்தவிர வேறு யாருக்குத் தோன்றும்! இப்படியொறு ஈடுபாடா என்று வியக்காமல் இருக்க முடியவில்லை.

நாமாக்கள் அத்புதமானவை. சிறிய திருவடியைக் கண்டு அவனது பேச்சில் ஈடுபட்டு ராமன் வியப்பினில் ஆழ்ந்தது போலவே இவரது இந்த நாமாக்களின் படைப்பு வியப்பினில் ஆழ்த்துகிறது. புலமை பொலிகின்றது. பக்தி மிளிர்கின்றது. என்னே! இதைப் பூராவும் கண்டு களிக்கும் பாக்யம் பெற்றேன். புலமைக்குத் தலைவணங்குவதா பக்திக்குத் தலைவணங்குவதா! ஸங்கல்பத்துக்குத் தலைவணங்குவதா! புரியாத நிலையில் தலை வணங்குகிறேன்.

எனது சிற்றறிவுக்கெட்டின வரையில் ஒரு சில ரஸத்தை மட்டும் கோடி காட்டும் வகையில் குறிப்பிடுகிறேன். கண்டு கொண்டதைப் பகிர்ந்து கொள்வதற்காகவேயன்றி வேறில்லை. ஸஹஸ்ரத்தில் ஒவ்வொரு சதகமும் தனித்தன்மையோடு நடையாடுகிறது. ப்ரதிபர்வரஸோதய: என்பர். அவ்வண்ணமே கரும்பில் கணுக்குக்கணு ரஸம் போலே சதகத்துக்கு சதகம் ரஸ பரிதமாக அமைந்துள்ளது பரமரஸம். விரிவுக்கஞ்சி ஒரு சில நாமாக்களை மட்டும் குறிப்பிடுகிறேன்.

முதல் சதகம் : நாததேவாய் தீமஹி என்கிற காயத்ரியில் த்யாகராஜர் நாதப்ரம்ஹம் என்று ஸூத்திரமாகச் சொன்னார். இதை விளக்கும் அடிப்படையில் ஸங்கீதாலயப்ரதிஷ்டித பகவதே என்று தொடங்குகிறார். 9, 10, 16ல் நாதப்ரம்ஹானந்த ஸ்வரூபாய, ஸுஸ்வர தேவதை, நாததேவதை என்ற வகையில் ஸ்வரூபத்தைச் சொல்லிப் பிறகு அவரது திருமேனியை வர்ணிக்கும் வகையில் நாமாக்களின் அமைப்பு ஈடுபாட்டின் மிகுதியைக் காட்டுகிறது. நாமாக்களில் பலவிதமான க்ரமங்கள் கையாளப்பட்டுள்ளன. ஸங்கீதமூர்த்தி ஸ்ரீராமமூர்த்தி என்பதும் 33ல் நாதோபாஸன ஸுஸ்வர-புஷ்பாபூஜித பத புண்டரீகாய என்பதும், 96இல் ஸுரகங்கை என்பதும், ஸங்கீத என்றே தொடங்கும் நாமாக்களும், இடையில் ஸங்கீத என்ற நாமாக்களும், நாத ஸ்வர கடித நாமாக்களும், நிறைந்தது இம் முதல் சதகம். இதில் வரிசைப்படுத்துவதும் அழகு. பக்தாச்ர்வபிஷிக்தபாவன மூர்த்தயே என்பது ரஸம். நாதோபாஸன லாலஸா - தும்பரதாள ஸுநாதந கராரவிந்த என்று சித்திரிப்பது அழகு, ஆங்காங்கு அற்புதமான பதப்ரயோகங்கள் புலமைக்கு எடுத்துக் காட்டு. வீணை என்பதுடன் நாத என்பதை இணைக்காமல் ப்ரக்வண என்பது எவ்வளவு அழகாக இருக்கிறது! (41) மேலும் இந்த சதகத்தில் கங்கா ஸம்பந்தம் அதிகமாக இருக்கிறது. கங்காப்ரவாஹம் போல் நாமாக்கள் உந்துகின்ற பொழுது கங்கையே பல நாமாக்களில் இடம் பிடிக்கிறாள் போலும். ஸங்கீத க்ஞான கங்கை, கான கங்கோத்பேதம், கங்கா ப்ரவாஹம் கீர்த்தன கங்கை, கீத கங்கை வாக் கங்கை கங்கா தீர. கங்காஸ்நான - பஞ்சநத-க்ஷேத்ர.......ஸங்கீத ஸுரகங்கை என்ற அடைவில் அமைந்த நாமாக்களில் ஒரு பக்தி கங்கையே ப்ரவஹிக்கின்றது. இது அத்யத்புதம். கல்பத்ருமம் என்றும், அதில் ஸங்கீத ஞானமே பலம் என்றும் கூறியதோடு நிற்காமல் ஸ்வாது பலம் என்று பிறகு கூறியதும் பரம ரஸம். மேலும் பலநாமாக்களில் திருமேனி வர்ணனம், படிப்படியாக இயற்கையமைப்பின் வர்ணனம் என்பவை ஸ்வானுபவ பரீவாஹத்தைக் காட்டுகின்றன. ஸங்கீதாபரநாமா ஸுஸ்வரதாமா என்று முடிவில் கூறுவதும் பாங்கே. இவ்வண்ணம் அழகான சொற்கள். அத்புதமான உல்லேகங்கள். அழகான வரிசைப்படுத்தல் இது அத்புதமான திவ்யகவிஸ்ருஷ்டியேயாகும். ஸங்கீத லோகத்துக்கோர் வரப்ரஸாதம்.

இரண்டாம் சதகம் : முதல் சதகத்தில் தொடக்கத்தில் ஸங்கீதாலய ப்ரதிஷ்டித தேவாய எனப்பட்டது. ஸஸ்மித ஸங்கீத தேவாய நம:

என்று தொடங்கி நாததேவாய என்று காயத்ரியில் கூறியது மேற்கொள்ளப்பட்டது. முடிவிலும் நாதாவதார த்யாகப்ரம்ஹ ஸத்குரு நாதாய எனப்பட்டதும் இதை வலுப்படுத்துகிறது. முதலில் ஸங்கீதத்தை அறிமுகப்படுத்துவது ஸமஞ்ஜஸம். ஸஸ்மித ஸங்கீதம் - ஸதாநந்த ஸங்கீதம் - ஸங்கீத ஸத்வம் - ஸதாதந ஸங்கீதம் - ஸத்ய: ப்ராணகர ஸங்கீதம் - என்பவை பஞ்சரத்னங்கள். த்யாகராஜரின் அவதார ரஹஸ்யத்தைக்கூறும் (120) ஸநாதந பரப்ரம்ஹஸகுணோபாஸன - ஸங்கீதமார்க ஸம்ஞாபநார்த்தாவதீர்ண பரமபாவநாய என்பது உள்ளதை உள்ளபடி உணர்த்துவதாம். 121 வது நாமா முதல் ஸ்ரீராம சப்தயோகம் 215வது நாமா வரையில் அத்புதமாய் அமைந்துள்ளது. நாதாவதாரம், நாதநதீ - நாதபர்ஜன்யன் நாத குஸுமாய, நாமோந்நாத நாத, நாதயோகி, நாதோபாஸன, நாதப்ரம்ஹானந்த... நாதாலய என்கிற நாமாக்களில் நாத சப்தத்தையே ப்ரயோகித்தது அழகு. 121வது நாமா பரிபூர்ணாவதார ஸ்ரீராம - த்யான - நாமபஜன - ஸுகுணகாந பரிபூர்ணர்த்தாய என்பதும், ஸங்கீத க்ஷீரஸாகர என்பதும் ஸங்கீத மத்ஸ்யாவதார என்பதும், ஸ்வமாநஸ சாமீகர பீட என்பதும் மிகரஸமானவை. இங்கு பூஜாவிதியும், உபசாரங்களை ஸமர்ப்பிப்பதும் அழகாக அமைந்துள்ளது. ஸ்ரீராமதேஜோமய விக்ரஹ த்யான பராய, கானலோல ஸ்ரீராம லோல, ஜிதராம ஜித மாநஸாய, ரமணீய நாம ராமாபிராம ச்ரோத்ராபிராமகான லீநாய முதலானவை போக்யமானவை. 209ல் வந்தத என்பது அபூர்வப்ரயோகம். 121வது நாமா முதல் ஸ்ரீராமனை இணைத்தே நாமாக்கள் தோன்றியுள்ளன. 123 முதல் 194வது நாமாவரை ஸ்ரீராம சப்தமே முதலிடம் பெற்றுள்ளது. 195 முதல் 215 வரை நாமாக்களில் ஸ்ரீராமன் என்கிற சப்தம் இடம் மாற்றம் செய்யப்பட்டதேயன்றி ஸ்ரீராமமயமாகவே உள்ளது அபிராமம். அடுத்த சதகத்தில் எல்லாமே ஸ்ரீராமமயம். இங்கு பொதுவாக கூறப்பட்டது. (123) ஸ்ரீராமன் என்கிற மலையில் தோன்றின தேவகான ஆகாசகங்கை, என்றாரம்பித்து கல்லோலிநீ, ப்ரவாஹம், பர்ஜன்ய, ஜீமூதஸ்வனம் ஜீமுதவர்ஷம் மதுகங்கா ப்ரவாஹம் என்கிற வரிசைக்ரமம் ரஸம். க்ஷீரஸாகரம் என்றும் கூறப்படுவதும் போக்யம். பல கோணங்களில் ஒரு விஷயத்தையே வர்ணிப்பது கைவந்தகலை. (176) ஸ்புரத் ஸஹஸ்ர கீர்த்தனம் ஸ்ரீராமவிபூஷணம் என்பதும் ரஸம். காகலிக்வணித, கிஷ்ணு, வந்தத போன்ற சொற்கள் அபூர்வமானவை. ரமணீயநாம - ராமாபிராம - ச்ரோத்ராபிராமகாந லீநாய என்பன போன்ற நாமாக்கள் எத்தனை முறைகள் சொன்னாலும் தெவிட்டாதவை. ஒவ்வொரு நாமாவிற்கும் விளக்கம் தருவது பாரதத்தை விஞ்சுமாதலால் அஞ்சி சில கூறினேன்.

**மூன்றாவது சதகம் :** இங்குள்ள 108 நாமாக்களில் புலமை - பொலிகின்றது. ஆழ்ந்தஅறிவும் பக்தியும் அனுபவமும் படைத்தாலன்றி இப்படைப்பு அஸாத்யம். சொற்களின் உபயோகம் பாவனையின் ஏற்றம் அத்புதம். சில நாமாக்களை எண்களைக் கொண்டு குறிப்பிடுகிறேன். விரிவுக்கஞ்சியே. ஸ்ரீராம சப்தத்திலேயே இணைந்து - அதையே முதலாகக்

கொண்டு நாமாக்கள் மிளிர்கின்றன. முதல் நாமா ராம சைதந்யாய என்பது. இப்பொழுது க்ருஷ்ண சைதந்யர் நினைவிற்கு வராமல் இருப்பரோ! ஸ்ரீராம ப்ரேமாவதாராய ஸ்ரீராமாநுராக மூர்த்தி என்கிற தொடர்ச்சி ரஸம். 226 ஸ்ரீராமபக்தியோகாரூடாய, 244 ஸ்ரீராமநாம சர்க்கராமிச்ரித மிஷ்ட பாஷிணே, 245ல் புஷ்பாவலி, 248ல் ஸ்ரீராமநாம கட்கதாரிணே, 249 ஸ்ரீராம ஸ்மரண ரோமாஞ்சன கஞ்சுகினே, 254ல் ஸ்ரீராம தாஸ தாஸ ஸ்வமாநிநே, 277 ஸ்ரீராம மய ஜீவநாசரித மஹாக்ஞாநிநே, 284 ல் ஸ்ரீமத்ராமாயண பாராயண பராயணுய, 288ல் ஸ்ரீராமபரத்வ பூயிஷ்ட க்ருதிரத்னத்யோதகாய, 291ல் ஸ்ரீராம தாரகரூப நிஜதத்வக்ஞாபகாய, 299ல் ஸ்ரீராம பாதார்ச்சன கீத புஷ்பாமோதவாஹிநே, 308ல் ஸ்ரீராமாபிந்நாய 310ல் ஸ்ரீராம தாரக மந்த்ரகோசராய, 311ல் கம்யாய, 313ல் குஹ்யார்த்த ப்ரக்ஞானதாய, 319ல் ஸ்ரீராமப்ரேம குட்மலித ஹ்ருத்புஷ்பார்ச்சன ப்ரியாய, 320 சரணுகதி பாவமது நைவேத்ய ப்ரியாய 322ல் ஸ்ரீராமதாரக நாமாநவரத ஜப பராயண சிஷ்ய(ா) - ப்ரியாய என்பவை அத்புதமாக அமைந்த சில நாமாக்கள். சில நாமாக்களில் தனக்கே யுரியதான சில தன்மைகள் கூடமாக காட்டப்படுவதும் அழகு. சில சொற்கள் வைதிக ரீதியை உணர்த்துகின்றன. ஸு॰நஸே, ஸு॰த்வநே, ஸேவ ஸு॰கிநே, பரிஷ்டவன, ப்ரதிஸாந்தாநிக, விமங்க்த்ரே, ஸங்கீத தநுஷே, ஸமஷ்டி வபுஷே முதலானவை. இவ்வாறு பல ரஸங்கள் கொண்டதாய் இந்த சதகம் அமைந்தது.

**நான்காவது சதகம் :** வர்ணக்ரமத்தில் 7 சதகங்கள். ஆசிரியன் மூலமாகத்தானே வர்ணக்ரமம் வேண்டும். ஆதலால் அநந்ய குரவே என்று தொடக்கம். அகாரத்தில் தொடங்கும் நாமாக்கள் 60. ஆகாரத்தில் 20 இகாரத்தில் 6, ஈகாரத்தில் 2, உகாரத்தில் 12, ஊகாரத்தில் 1, ருகாரத்தில் 6, ஏகாரத்தில் 2, ஆக 108 நாமாக்கள். முத்துக் கோத்தது போல் பளிச்சிடும் நாமாக்கள்.

இங்கு முதல் எழுத்தில் தான் நோக்கு, அனன்ய என்பது முதல் சொல் ஆனால் 345, 365, 366, 371, 372, 373, 380 என்ற நாமாக்களில் தொடக்கம் இந்த சொல்லே. ஒரே தொடர்ச்சியாக இருக்கலாமே என்று தோன்றினாலும் கருத்தின் வளத்தைக்கொண்டுதான் என்ற உணர்வும் ஏற்படுகிறது.

60 நாமாக்களில் சில நாமாக்கள் - இங்கு நாதத்திற்கு முக்யத்வம் காணப்படுகிறது. 20 நாமாக்கள் இவ்வாறு ஒலிக்கின்றன. இவற்றுள் சில அத்புதமான நாமாக்கள்:- அனந்த நாத சக்தயே, அதிகஹந நாதாரண்யாய, அசிந்த்ய ரூபாய, அமித மாதுர்ய பத ப்ரயோக விசக்ஷணுய, அத்புத கவிவராய, அவிரதஸ்மரணுர்த்ரீபூதானன்ய பக்தாத்யக்ஷாய (இதில் தனது நிலை உணர்த்தப்படுகிறது) 366 ஸங்கீத சிக்ஷாகுரவே, அபயாஞ்ஜல்யவிதூராய, என்பவை. 60க்கு மேலும் பல ரஸங்கள். ஆசார்ய தேவாய என்பது ஆசார்ய தேவோ பவ என்பதையும் உணர்த்துமே. ஆஹ்லாதக காநவித்யா வரதாய ஆத்மதத்வக்ஞானதாய என்பவை ஆகா-

ரத்தில் போக்யமானவை. இஷ்டதெய்வதாய, ஈச்வரப்ரஸாத நாதவித்யா ஸௌக்ஷ்ம்யோபதேஷ்ட்ரே, உத்தம ச்லோக ஸங்கீத குரவே, உத்தம ஸங்கீத ஸித்தாய, உத்ஸவஸம்ப்ரதாயகீர்த்தனாபராய, உபாஸகோத்தாரகாய, ஏகாந்த பக்தி புஷ்போபாஸித குரவே என்பவை ரஸமான நாமாக்கள்.

இங்கு கையாண்ட சப்தங்கள் நிகண்டுவை தேடச்செய்கின்றன. அநுசயிஜிகத்னவே, ஆத்மஸநயே. இயஸா வ்யபாகர்த்ரே, ருக்ம்யூமாய, ருஜூவநயே. ருதந்யே, ருத தீதயே, ருததாம்நே ஊர்ஜா, அபிரோருத முதலியன.

மேலும் வர்ணிக்கும் முறை:- சக்தி, ஊர்ஜா, ஓஜஸ் தரு அரண்யம் மஹார்ணவம், நாதமூர்த்தி, லஹரி, ஸ்ருதி கதி, அதிபதி, வர்ஷம் ப்ரக்ஷரணம், குஸுமம், வஸு, ஜிகத்னு, மஹோததி, ராகம், திவ்ய தேஜஸ், ஸநி, நிதி, தேவ, தைவதம், ஸித்த ஸிந்து - கான கோகிலம் என்ற வகையைப் பார்க்கும் பொழுது தமது குருநாதனை எவ்வாறெல்லாம் காண்கிறார் என்பதும் தெள்ளென விளங்குமே. ஏதைச் சொல்லுவது ஏதை விடுவது என்ற ஸங்கடமான நிலையில் தோன்றியதை மட்டும் குறிப்பிட்டுள்ளேன்.

**ஐந்தாவது சதகம் :** ஐந்தாவது சதகம் தொடங்கும் பொழுதே ஏகாந்தபக்தி ப்ரதீத ஸத்குரவே நம: என்பது. ஒவ்வொரு நாமாவும் ஆழ்ந்த கருத்துக்களை உள்ளேயடக்கியுள்ளது. ஒரு சில நாமாக்கள் அமைந்த அழகை மட்டும் காட்டுகின்றோம். 439வது ஐகாக்ர்யத்தை கொடுப்பவர் அவரே என்பதும், கதநாதகாய 447 கர்ம கௌசலப்ரதாயிநே என்பதும், 451 கார்ய ஸித்தி ப்ரதாய என்பதும், 452ல் கார்த்த ஸ்வர ஸ்வராய என்பதும் ரஸம். இதில் ஸ்வரசப்தம் இருபொருளில் வருவதைச் சுட்டிக் காட்டுவது கவனிக்கத் தக்கது. கார்த்தஸ்வரம் என்பதற்கு தங்கம் என்று பொருள். அவ்வண்ணமே கீர்த்தனாசார்யர் என்பதும், க்ரவண பக்த்ரு ஸ்பர்த்ரே என்பதும். 484 கிராமாதுர்யவரதாய என்பதும், குருதமாய குருத்தமாய என்று இணைத்துப் பேசியதும், க்ருஹ தைவத்யம் என்பதும், சிரஸ்த்தாயி ஸங்கீதாநந்த ஸுகீர்த்தந ப்ரதாத்ரே என்பதும் ரஸம்.

485வது திருநாமத்தில் கீர்தேவீ நிரந்தரவாஸ ஜிஹ்வாக்ர பக்தாக்ர்யாய நம: என்பதில் இவர் தம் குருநாதரை அநுராகத்துடன் வர்ணிப்பது போக்யம். வாகீச்வரியான ஸரஸ்வதி இவர்தம் நாவுநுனியில் நிரந்தரமாக வஸிக்கிறார் என்பதும் உண்மையே! இவ்வாறே 507வது திருநாமமும் அனுபவ பூர்வமானது.

108வது நாமா மிக மிக அத்புதம். அவர் தம் உரையிலேயே தெளியலாம். ஸஹஸ்ரத்தில் நடுநாயகமாக, 540வது திருநாமமாக அமைந்துள்ளது இப்பெரிய திருநாமம். இவ்வாறு நாமாவளியை இங்கு கண்டு கொண்டோம். ஒவ்வொரு இடத்திலும் ஒருவிதமான க்ரமம் கையாளப்படுவதை ஆராய்ச்சியினால்தான் அறிய இயலும்.

**ஆறுவது சதகம் :** ஒவ்வொரு சதகத்தில் ஒருவகையான ரீதி கையாளப்பட்டுள்ளது. ஆழ்ந்து கவனிப்பவர்களுக்கு மட்டுமே இது

விளங்கும். மனதைக் கவர்கின்ற இந்நாமாக்களில் சிலவற்றை மட்டும் குறிப்பிடுகிறோம். தொடக்கம் ஜுஷ்ய ஸங்கீத ஸ்வாமிநே என்பது. 551 , தத்வதர்சகாய, 554, தமோமய சிஷ்ய சித்தோத்தேஜகாய 558. தீர்த்ததமாய, துஷ்டி ஜநநாய, த்யக்த ஸங்காய, தாஸஜநாக்ரேஸராய, 'நாதோபாஸிதோச்சவஸிதாய', நிஜபக்தரக்ஷகாய, நித்யாநந்த ரூபாய, நிரவதி ஸங்கீத ஸுகத ஸத்குரவே, நிர்மல நிச்சல சித்தாய என்பதோடு நில்லாமல் நிர்மல நிஸ்சல சித்தஸ்த்தாய என்பது ரஸம். நித்ராலஸ்யாராதயே என்பது அனுபவ முதிர்ச்சியை காட்டுகிறது. 648வது நாமாவில் நருபோத்தமனான ஸ்ரீராமகானத்தில் அபர பாகவதோத்தமனாய் விளங்கும் ஸ்ரீத்யாகராஜ ஸ்வாமிநே நமோ நம: என்று இந்த சதகம் முடிக்கப்பெற்றது. நூதன க்ஷீர நவநீத திவ்யகான ப்ரத்யூஷ ப்ராசித ஸ்ரீராமாய என்பதிலும் நூதனரஸம் சேர்ந்திருக்கிறது. ஒவ்வொரு நாமாவையும் விவரிக்கப்புக்கில் ஒரு பாரதமேயாகுமே!

**ஏழாவது சதகம் :** இங்கு நாதவ்ருத்திதஸத்குரவே என்று தொடக்கம். நைராச்யத்தைப் போக்குவது ஆசார்யர் என்பதும் நைஷ்கர்ம்ய ஸித்திப்ரதக்ஞாநாசார்யர் என்பதும். நைஸர்கிக ஸங்கீதத்தை வரமாக அளிப்பவர் என்பதும், நைஷ்டிக வாக்கேயகாரர் என்பதும், பரமாத்ம க்ஞாநாவபோதகர் என்பதும், பரார்த்ய குரு என்பதும் பராக்ருத பக்திரஹிதஸங்கீதச்ஞாநாய என்பதும், பரிசரித ஸ்ரீஸீதாராமார்ச்சாவதார மூர்த்தி என்பதும், புண்யகீர்த்தயே என்பதும், புஷ்ப ஸுவாஸித மாநஸ புஷ்பார்ச்சிதாய என்பதும் (இங்கு மானஸ புஷ்பம் என்பதுடன், புஷ்பம் போல் ஸுவாஸிதமான மனதையுடைய புஷ்பாவினால் அர்ச்சிக்கப்பட்டவனே என்று பொருளையும் குறிக்கும்.) பூஜார்ஹாய என்பதும், போதந பாகவதோத்தமாய என்பதும், பூஜகைக பந்து என்பதும் (ஸ்வானுபவம்), ப்ரதீக்ஷ்யமாண ஸங்கீத குரு என்பதும் போக்யம். 727ல் தொடங்கி பக்தி பக்த சப்தங்கள் இடம் பெற்றன. இந்நாமாக்கள் அத்புதமானவை. 751 பாவ புஷ்பாபூஜிதாய என்பதும் ரஸம். 755 புஷ்பாநுக்ராஹிணே நம:, 756ல் பூரிதேஜஸ் ஸத்குரு ஸ்வாமிநே என்று நாமத்துடன் இச்சதகம் முடிவுபெறுகிறது.

இந்த சதகத்தில் வைதிக பதபரயோகம் சிந்திக்கவைக்கிறது. சில சொற்கள்:- வாவாத்ரு, ப்ரணேநீ, உபநிவாபி, பிந்வமாந, ப்ருசன, வரூத்ரே, ப்ரௌண முதலானவை. சில இடங்களில் அநுஸந்தானம் பண்ணும் பக்த கவியின் பெயர் தெளிவாக இருக்கிறது. பாவ புஷ்டியினுடைய இந்த ஸஹஸ்ரநாமத்தில் விலக்ஷணமான பக்தி பாவம் காணப்படுவதால் இந்த நிலை பிறரிடம் ஏற்படுமா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. பக்த என்று சொன்னாலும் அவரையே குறிக்கும் என்பதில் ஐயமில்லை. பிறருக்கு அந்த நிலையேற்பட்டால் தடையில்லை. ஏற்படுமா! எழுச்சிமிக்க சதகம் இந்த ஏழாவது சதகம்.

**எட்டாவது சதகம் :** ப்ருதஸங்கீதானந்த ஸத்குரு ஸ்வாமி என்று தொடங்கி நாதயோகி ஸத்குரு என்று எட்டாவது சதகம் அமைகின்றது.

பவில் 3, மகாரத்தில் 37, யகாரத்தில் 10, ர-22, ல 16 வ 20.

மகாரத்தில் (37) அதிக நாமாக்கள் மதிப்புடையவை. மங்களகானமூர்த்தி, மநீஷித ஸங்கீத பலப்ரத, மந்த்ரதாதா, மங்களகாரீ, மஹானுபாவ, மஹித குருதேவ, மானகன, மாப்தாப்த, மூலாயதந, மேரு ஸமான மேதாவிலாஸி, மோதகர நாதகுரு என்பவை ஒரு சில. இவற்றுள் மா-ஆப்தன் - பகவான் அவனுக்கு ஆப்தர் இவர் என்பது ரஸம். இவ்வாறு யகாரத்தில் 10. அவற்றுள் யதிச்ரேஷ்ட்ட, யசஸ்வீ, யசஸ்கர, யோகஸார நாதவித்யாஸாகராய என்பவை யோக்யமாவை. யோகத்தின் ஸாரம் நாதவித்யை என்பதும் அதற்கு கடலாவார் என்று கூறும் பாணி ச்லாக்யமானது. முன்பும் போதந என்பதும் இவ்வகையில் அமைந்ததே. இவ்வண்ணம் ரகாரத்தில் அமைந்தவை 22, இவற்றுள் ரங்கசாயி திவ்யருப ஹ்ருத்பூஷணய என்று தியாகய்யர் ஈடுபட்ட ரங்கநாதனையும் நினைவுறுத்தும் நாமம். ராமநாமமாகிற ரக்ஷாமந்திரத்தை உபதேசித்தவர் என்பதும், ராகரஸிகன் ஸ்ரீராமன் என்பதும், ராகஸ்வரூபன் என்பதும், ராகத்வேஷரஹிதன் என்பதும் குறிப்பில் கொள்ளத்தக்கவை. லகாரத்தில் லப்தவர்ண என்பது ரஸம். இனி வகாரத்தில் அமைந்தவை 20. வந்தநீயாய, விமல ஹ்ருதயாய, விச்வஸநீயாய, வேங்கடேசநாமஸோபாந ஸந்மார்கோந்நேத்ரே, வேதாந்த வேதி நாதயோகி ஸத்குரு என்று முடிப்பதும் அழகு. இந்த சதகத்தில் ரங்கநாதனையும் திருவேங்கடமுடையானையும் இணைத்ததும் அழகு.

**ஒன்பதாவது சதகம் :** வ்யாஸக்தோபாஸக ஸமுத்தரண ஸத்குரவே நம: என்று தொடக்கம். உபாஸிகா என்று ஸ்பஷ்டமாக கூறாமல் உபாஸக என்று பொதுவாகக்கூறினாலும் பொருள் தெளிவே. முதலிலேயே ஸத்குருவின் அருளைக்காண்பிக்கிறது. 44 நாமாக்கள் சகாரத்தில் இடம்பெற்றுள்ளன. ச்ரேஷ்டமான நாமாக்கள். ஸத்குருவை சப்தப்ரம்ஹம் என்று கூறுவது பெருமை. சப்தாதீதன். சமசர்மதன், சாந்தமனஸ்ஸௌக்யப்ரதன், சாதகும்பலிகிதவ்ய ஸங்கீத ச்ரேயஸ், சிஷ்ய வத்ஸலன், சிவங்கரன், சுச்யவதாரன், சைதில்ய ப்ரதிஹர்தா, ஸப்தஸ்வர ஸுரதனுஸ் (வானவில்) கானசௌண்டன், ஸ்வரவித்யா ஸித்தி விதாதா, ச்ரவணஸுபக ஸுஸ்வரன், ச்ருதிலய ஸ்வரூபன். ஸுஸ்வர ஸங்கீத புஷ்பார்சிதன், ச்ரேயஸ்கரன் என்கிற நாமாக்கள் ரஸமானவை. "ஷ" வில் ஒன்றுதான். ஷட்ரிபு ஸூதனன் என்பது உத்தமோத்தமம். இனி ஸகாரம் - 62 நாமாக்கள். அடுத்த சதகத்திலும் 56 நாமாக்கள். இவ்வாறு 118 நாமாக்கள் ஸகாரத்தில் இடம்பெற்றன! இந்த சதகத்தில் வரும் பாங்கினை முதலில் பார்ப்போம்.

ஸங்கீதார்த்த ஸாதநாய என்பது தொடக்கம். அதைத் தொடர்வது அத்புதமாந நாமம். ஸங்கீத பரமாசார்யாய என்பது. பிறகு ஸப்தஸ்வரத்துடன் ஸமஷ்டி. ஸந்நிவிஷ்ட, ஸஞ்சர எனப்பட்டது. ஸங்கீதாவதாராய, ஸங்கீத யோகத்தில் கூடஸ்த்தர் என்பது போக்யமானது. ஸம்ஸக்தமானஸ ஸர்வஸ்வாய, என்பது தந்நிலை. ஸப்த ஸ்வரங்களாகிற துடுப்பினால் ஸ்ரீராமநாமம் என்கிற படகில் வைத்து ஸம்ஸாரமாகிய

ஸாகரத்தைத் தாண்டுவிப்பவர் என்று தெளிவான ரூபணம். ஸமான ரஹித என்பதை ஸ்ரீராமகுணகானங்களில் இவரும் ஸமானமில்லாதவர் எனபது ரஸம். ஸரஸ கவி, கானவிநோத, கவிவர, ஸாதுச்ரேஷ்ட, பவித்ராத்மா என்கிற வகையில் அமைந்த நாமாக்கள் ஸத்ஹ்ருதய ஹ்ருதய போக்யமாகும். ஸங்கீத ஸத்குரு.... ஸ்வாமிநே நம: என்று இனிதே இந்த சதகம் முடிவுற்றது.

பத்தாவது சதகம் : ஸுமுக என்றாரம்பிக்கின்றது பத்தாவது சதகம். ஸுமுகன் ஸ்ரீராமன். ஸுஸ்வர கானநுதியால் இவரும் ஸுமுகி எனப்பட்டது. இங்கு மேலே வரும் நாமாக்களில் கவிநயம் விஞ்சியிருக்கிறது. அவற்றுள் ஸூர்யகுல....ஸுஸ்வர ஸூர்யாய என்பதும், ஸேவ்ய ஸத்குரவே, ஸௌபாக்யபலாய, ஸ்தோதவ்யாய, ஸ்துதி புஷ்பார்ச்சனவிரோசிஷ்ணவே, என்பவை ரஸமானவை. 1002வது நாமம் அழகு. ஸ்ப்ருஹிததர்சன - சரண ஸ்பர்சன - திவ்யகான ச்ரவண - பாக்யத்தை அளிக்கும் ஸத்குரவே என்பதில் எவ்வளவு ரஸம் அடங்கியுள்ளது! 1012வது நாமம் அத்புதம் - ஸஹஸ்ரநாமம் முடியப்போகிறதல்லவா! முன் கூட்டியே ஸ்புரிப்பதால் அமைப்பு போற்றத்தக்கது. ஸ்புரத் - ஸஹஸ்ர நாமாவளி ஸுசோபிதாய எனப்பட்டது. ஆயிர நாமாக்கள் பெறுவது எளிதல்ல. பகவானுக்கே இது சிறந்த பெருமையாயிற்று. இங்கு ஸ்புரித்ததும் ரஸமே. இந்த நாமாவளியால் இந்த பக்தை ப்ரம்ஹத்தை அலங்கரிக்கிறார். அதனால் த்யாகப்ரம்ஹம் மிகுந்த சோபை அடைந்துள்ளது என்று உளம் பூரித்து ஸமர்பித்த திருநாமம் இது. இங்கு ச்லேஷையாகவும் கவியின் பெயர் குறிப்பிடப்படாததும் ரஸம். ஸ்வரஜித ஸாரங்காய என்னுமிடத்தில் ஒரு ராகமும் குறிப்பிட்டதாகும். 1025ல் ஸ்வானன்யபக்தானுராகமானஸ புஷ்பாந்தஸ் ஸமாஸீநாமோதாய நம: என்பது ஆமோதம் வீசும் பெயராகும். 1026லும் தான் அனன்ய பக்தை என்பதும் குறிப்பிடப்பட்டது. மேலும் 1030 ஹர்ஷகர குருதேவர் என்பதும், 1032ல் ஹரிதாஸ சிரோமணி என்பதும், 1031 முதல் 1044 வரை ஹரிஸம்பந்தத்தால் ஏற்படும் பெருமைகளையும் தொகுத்தார். 1045 ல் ஹனுமல்... கானபூஜாபரபுண்ய சரிதாய என்பதும், ஹிதகராய என்பதும் ஹிதோபதேஷ்ட்ரே என்பதும் ஆசுகவிதாசக்தி விதாத்ரே என்பதும், 1061ல் புஷ்பாபூஜித என்பதும், இதம்பக்த பாலாலாப ஸ்துதி என்பதும் மிக மிக ரஸகனமானவை.

இவ்வாறு 1068ல் அக்ஷர ஸுஸ்வர ஸஹஸ்ரநாம புஷ்பாஞ்ஜலி ஸமர்பணஸேவித ஸதகுரவே நம: என்பது சிகரமாய் அமையும். ஒவ்வொரு நாமாவையும் இவர் தினந்தோறும் ராகத்துடன் தான் சொல்லி த்யாகப்ரம்ஹத்திடம் லயிப்பவர் ஆதலால் அக்ஷரங்கள் ஸுஸ்வரமாய் அமைந்தவை என்று விச்வாஸத்துடன் கூறப்பட்டது. புஷ்பாஞ்ஜலியில் ரஸம் மணம் இரண்டும் அதிகம். அக்ஷரம் என்பதை அ முதல் ஹ வரையில் தொகுத்ததால் அக்ஷரங்கள் ஸுஸ்வரத்துடனே அமைந்துவிட்டன. நாமங்களாகிற புஷ்பங்களையுடைய அஞ்சலியை ஸமர்ப்பிக்கிறேன் என்பதும்,

அழிவில்லாத ஸுஸ்வரமான ஆயிரநாமங்களை இயற்றிய புஷ்பாவின் அஞ்ஜலியால் ஆராதிக்கப்பட்ட ஸத்குரு என்று 1068ல் கூறுவது மிக மிக போக்யமானது.

1069 முதல் நாமாவளியில் முதல் எழுத்துக்களை மட்டும் சேர்த்தால் **ஸ்ரீத்யாகராஜாய ஸத்குரவே குரவே நமோகுரவே நம:** என்று வரும் வகையில் அமைந்த நாமாக்கள். இந்த நாமாக்களின் அடைவில் கருத்தின் ஆழத்தைக் காண-லாம்.

**ஸ்ரீ**கராய - என்பது ஸ்ரீமான் என்றும், மங்களம் செய்பவர் என்றும் குறிப்பிடுமாம்.

**த்யா**கயுதாய - த்யாக என்பதாலேயே த்யாகத்தை உடையவர் என்று விளங்குமே எனப்படும்.

**க**மக காய - க என்பது கமகத்துடன் பாடியுள்ளதை வலியுறுத்தும்.

**ரா**க மூலாய - ரா என்பது ராகத்திற்கு மூலமானவர் என்பதைக் குறிக்கும்.

**ஜா**கர்த்தயே - ஜா என்பது விழிப்புணர்ச்சியைக் காட்டும்.

**ய**தாநாம்நே - ய என்பது பெயர் பொருத்தத்தைக் காட்டும் எனப்-பட்டது.

**ஸத்குரவே** - ஸத் என்பது குருவைத்தான் குறிப்பது எனப்பட்டது.

**கு**ஞ்சரயாய - கு என்பதே குணங்களுக்கெல்லாம் இருப்பிடம் என்று காண்பிக்குமே.

**ர**க்தி ராக ப்ரியாய - ர என்பது ரக்தியினையும் ராகத்தின் ப்ரீதி-யையும் காட்டும்.

**வே**தஸாரக்ருதி கராய - வே என்பது வேதஸாரமான க்ருதிகளைப் பண்ணினவர் என்பதைக் காட்டும்.

இனி **நமோ குரவே நம:** என்று முடிக்கப்பெற்றது.

1080வது திருநாமம் உண்மையில் திருநாமமே. மங்களமாயும் ஸுஸ்-வரமாயும் புஷ்பத்தினால் - புஷ்பாவினால் அர்ச்சிக்கப்பட்ட த்யாகப்ரம்ஹ ஸத்குரு ஸ்வாமிநே என்று முடிக்கப்பட்டது.

சாஸ்த்ர மர்யாதையுடன், பக்தியின் பரீவாஹமாக உள்ளத்தில் அவர-ருளால் உந்தப்பட்டுத் தோன்றிய நாமாவளிகள் பொலிக பொலிக என்று நாடெல்லாம் நறுமணத்துடன் விளங்கி அனைவருக்கும் மங்கள பரம்ப-ரைகளை உண்டுபண்ணும் என்பதில் ஐயமில்லை.

இத்தகைய அத்புதமான நாமாவளியைக் கண்டு களிக்கச் செய்த ஸ்ரீமதி புஷ்பா ஸ்ரீவத்ஸன் தம்பதிகளுக்கு என்னுடைய பூரிப்புடன் கலந்த இதைப் பூரணமாகப் பூரித்து தன்யனாகிறேன்.

## சரணாகதி கத்யம்

காவ்யங்களை மூன்றாகப் பிரித்தனர். கத்யரூபம், பத்யரூபம், கத்யபத்யரூபம் என்று. வ்யக்தமாகச் சொல்வதை கத்யம் என்பர். கதவ்யக்தாயாம் வாசி என்பது தாதுவின் பொருள். நமக்குத் தெரிந்த வகையில் சரணாகதி என்கிற விஷயத்தை ப்ரதானமாகக்கொண்டு சரணாகதிகத்யம் என்ற அழகான கத்யத்தை ராமாநுஜர் இயற்றினார். வேதாந்த தேசிகரும் ஸ்ரீராமசரிதத்தை ப்ரதானமாகக் கொண்டு ரகுவீர கத்யம் இயற்றினார். இவ்வகையில் ஸ்ரீமதி புஷ்பா ஸ்ரீவத்ஸன் பக்த்யாவிஷ்டராய் தனது தெய்வமான த்யாகப்பிரம்ஹத்தின் பெருமைகளை விளக்கும் வகையில் இந்த சரணாகதி கத்யம் என்ற மஹாகத்யத்தை இயற்றியிருக்கிறார். பக்திப்பெருக்கினை வெளிப்படுத்தும் இம்மாதிரி கத்யத்தில் பக்தியே ப்ராண ஸ்தானத்தில் இருப்பதால் கனமான அபிப்ராயங்கள் தெளிவாகின்றன. கம்பீரமான சொல் வண்ணத்தாலும் கருத்து வெள்ளத்தாலும் இதைப் படைத்திருக்கிறார். பக்தியின் மிகுதியால் சொற்கள் போட்டியிட்டு நான் முன்னே நான் முன்னே என்று இவர் முன் அணியிட்டு நிற்கின்றன. என்னே பாக்யம்! இந்த சரணாகதி கத்யத்தினைப் பார்க்கும் வாய்ப்பு கிடைத்ததற்கு பெருமகிழ்ச்சியடைகிறேன். இக்காலத்திலும் இத்தகைய ஸம்ஸ்க்ருதப் புலமை நடமாடுவதை நினைத்து மகிழும் போது வியப்பும் உண்டாகிறது.

இவ்வண்ணம் இந்த கத்யம் ப்ரதம ச்ரேணியில் ஏற்கப்படவேண்டிய ஏற்றம் பெற்று விளங்குகிறது. கவித்திறன் என்னலாம், பக்திச்சுனை என்னலாம். த்யாகப்ரம்ஹத்தின் திருவருள் பெருக்கு என்னலாம். மெல்லிய உள்ளமும் அழுத்தமான ஆர்வமும் போக்யமும் யோக்யமுமான பக்தியும் இங்கு ஒவ்வொரு வாக்யத்திலும் ஸ்வ ஸ்வரூபத்தையும் விச்வரூபத்தையும் ஏற்று கம்பீர நடைபோடுகின்றன. 170 ஸம்போதனம். அத்புதம். 170 ஸம்போதனத்திலும் எது ஸாதாரணம் என்று எதையுமே சொல்ல இயலவில்லை.

ஸ்ரீத்யாகப்ரம்ஹம்தான் ஸத்குரு-தாய்-தந்தை-தெய்வம் என்ற திடமான ஈடுபாடு வியப்பினை உண்டாக்குகிறது. கையாளும் பாணி அத்புதம். 2052 நாமாவளி இயற்றியும் உள்ளடங்காத பக்திப்ரவாஹத்தால் உந்தப்பட்டு உதித்து இந்த கத்யரத்னம். ஜயஜயகோஷத்துடன் தொடங்கும் இந்த கத்யமும் ஜய கோஷத்துடன் விளங்கும் என்பதில் ஐயமில்லை.

பார்த்ததற்கோ, அல்லது புரிந்து கொண்டதற்கோ அடையாளமாக ஒரு சில குறிப்பிடுவது என் கடமை என்று எண்ணி சில குறிப்பிடுகிறேன். இதன் பெருமையை முழுவதும் சொல்லத்தான் ஆமோ!

எதற்கும் முன்னம் காயத்ரீயின் பாணியில் சுருக்கி எழுதுவது இவரது நிலை. அதற்கேற்ப சுபசரணாய தீமஹி என்றார். சரணாகதிக்குச் சரணங்கள் தான் முக்யம் என்பதை தெளிவாக்கும் வகையில் முதல் 12 வாக்கியங்கள் அமைந்தது அத்புதம். அதிலும் குருசரணம் மேலே எட்டாத இடத்தில் இருக்கிறது. அதை அடைய ராமநாமமெனும் இறகு இருந்தால் தான் இயலும் என்பதை ஸ்ரீராமநாமகருதைவ ஸ்பர்சனீய குருசரண என்பதால் உணர்த்துகிறார். குருசரண என்ற இடத்தில் குருவின் சரணமே என்ற பொருள் கொள்ளப்பட்டது. ஆசார்யனே என்ற பொருளும் கூடும். குருசரண, சுபசரண, பாவந சரண, ஸச்சரண என்பவை ரஸகர்ப்பமானவை. 6வது வாக்யத்தில் மூன்று பெருமைகள் கூறப்பட்டன. பக்தாகநாசந ஸர்வார்த்த ஸாதந-ஸங்கீத ஞாநத என்று. இவை மூன்றும் ஸச்சரண என்பதற்கு விசேஷணம். மூன்று பெருமைகளும் சரணத்துக்கே உண்டு என்பதும் ரஸமே. முடிவில் சரணமஹம் ப்ரபத்யே என்று சொல்லவேண்டியிருக்க இங்கும் சரணமஹம் ப்ரபத்யே எனப்பட்டது. திருவடிவரிசையானதால் இங்கு ஒரு சரணாகதி. இவ்வாறு இங்குள்ள பாவ காம்பீர்யத்தை வர்ணிப்பது எளிதல்ல.

சில வாக்யங்கள் அமைந்திருப்பதை இங்கு குறிப்பிடாவிட்டால் குறையாமே! ஆதலால் (விரிவுக்கஞ்சி) தோன்றிய சிலவற்றை மட்டும் குறிப்பிடுகிறேன். ஒவ்வொரு இடத்திலும் தனித்தன்மையைக் காணமுடிகிறது. ஹரிநாம புஷ்பாகரபூஜித பத்ரபாத என்ற தொடக்கமே போதும். 18-வது வாக்யம்:- ஸ்ரீராமரம - ராமாராம - ராமரம - ராகாலாபநரம - ராமநாமாராம! (33)நிஷ்காம-நிர்மோஹ - நிஜதாஸரக்ஷக! (47) ராஜித ராம ஸங்கானபூஷ - பூஷவம்சபூஷ-பூஷணராம-ராம ஸுஸ்வர- ராமநாம முக்தாவளி பூஷித (65) பவமாநஸ பாவந பாவன பவஸந்நுதி பவஸந்நுத ஸந்நுதி பாவந பவ பய கந கந கந ப்ரபஞ்ஜன ப்ரபஞ்ச நாத ப்ரபஞ்ச காத!

கௌஸல்யாபுத்ர மித்ர-கௌசிக மித்ர மித்ர - மித்ர குலேசமித்ராச்ரித மித்ர மித்ர மித்ரீக்ருத ஸ்ரீராமசந்த்ர! ஸ்ரீராமோபஸந்நோபஸந்ந ராமராம ராமநாம காநோபஸந்நோபஸந்ந பக்த பக்திபாவ புஷ்போபஸந்ந! ஸுஸ்வர ரஸபரித-ஸுஸ்வர ரஸமதுர - ஸுஸ்வர ஸமூஹவ்ருத ஸுஸ்வர சரீர-ஸுஸ்வரஸார - ஹ்ருதயஹாரி ஸுஸ்வர! அபச்ருதி வருத ஸுஸ்வர கவசாசார்ய! பக்த மனோவருண.... பலவருண! பக்த துரித மிஹிர மிஹிர... மீர மிஹிர - என்ற வகையில் அமைந்த வாக்யங்கள் வித்வல்லோகத்தில் விஸ்மயத்தை உண்டு பண்ணுகின்றன. கௌஸல்யா புத்ரமித்ர..... என்பதுடன் எவ்வளவு மைத்ரி கொண்டாடினாலும் போதாதே. ஹரி ஹரி...... என்பதில் ஏழுமுறை ஹரி சப்தம் ஒலிப்பது ரஸம். ஹரி என்று ஏழுமுறை சொல்லவேண்டும் என்பது நியதி. தனது கீர்த்தனைகளாகிய வலையில் ஸ்ரீராமக்ருஷ்ணர்களைக் கட்டி விட்டார் என்பதும் ரஸம். (ஸ்ரீராமக்ருஷ்ண.........ஸுகீர்த்தனஜால)

அச்ருகங்காஸ்னாதானந்யபக்தா..... என்பது ஸ்வானுபவத்தைத் தெள்-

ளக்காட்டுகிறது. மங்கள த்ருஷ்டிபாதம் இவரை சூழ்ந்தது - இவரது அனுராக பாலாலாபம். குருவின் பாதாதி கேசத்தை பரிவேஷ்டனம் பண்ணுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. ஸுஸ்வர வரப்ரபஞ்சம் அத்புதம். ஸப்தஸ்வரங்களை விமானமாகவுடையவர் என்பது கல்பனை ரஸம்.

இவ்வண்ணம் பல அத்புதமான ஸ்ருஷ்டியை எவ்வாறு கூற இயலும்! இதற்கு அனுபவம் தான் ஸமாதானமே ஒழிய எதையும் ஈடாக்க இயலாது. எல்லாம் கண்ணன் எம்பெருமான் என்ற ஆழ்வாரின் நிலைபோலே எல்லாம் த்யாகப்பரம்ஹம் தான் என்று ஈடுபட்டுபேசும் போது ஸம்ஸ்க்ருத வாணி நடமாடுகிறாள். குறிப்பாக ரகுவர ரங்கித......, யோகிவரராகலய......, ச்ருதிநிகர ஸதன... என்பது போன்ற கம்பீரமான ஒருசில வாக்யங்கள்! முழுதும் கூற இயலவில்லை. காலம் நீண்டது. வருண என்று ஏழுமுறை ஒரே வாக்யத்தில் அமைந்ததும், மிஹிரமிஹிர என்று 5 முறை மிஹிர சப்தத்தை தனித்தனி பொருளில் இணைத்ததும் அத்புதம். என்னே விந்தை! அவரது விளக்கத்திலேயே தெளியலாம். ஸப்தஸ்வர தேவதா தர்சக - ஸ்வரதேவதைகள் யார் என்பது யாருக்குப் புரியும்! அத்தேவதையைக் காண்பித்தவர் என்று பெருமைப் படுகிறார். மேலும் ஸுஸ்வர கவசாசார்ய என்கிறார். இமயமலையின் சிகரம் என்னலாம்படி இமயமலையின் உறைந்த பனியும் உருகும்படி ஆலாபனம் செய்யும் ஆற்றலையுடையவரே என்கிறார். இங்கு நாத சப்தம் 22 முறை ஒலிக்கிறது. இது இவரது வீணநாதம். இது இவரது பக்திக்கு ஒரு சங்கநாதம். ஸம்ஸ்க்ருத வித்வான்களுக்கு சிங்கநாதம். ஆனால் த்யாகப்ரஹ்மத்திற்கு ஒர் மழலை ஒலி. இறுதியாக உச்சரித மாத்ர ரோமாஞ்சனகரதிவ்யநாமந் - ஸத்குரு ஸ்வாமின்! ப்ராணுத்மன்! என்றழைத்து மம ஸஞ்சித கர்ம பஸ்மஸாத்குரு மாம் ஆத்மஸாத்குரு - என்பது ரஸம். மங்களமான மனஸ்ஸையுடைய புஷ்பாவிற்கென்றே உனது மலர்போன்ற திருவடிகளை அர்ப்பித்தவனே (மங்களகரமான இவ்வெண்ணமலர்கள் அர்ப்பணிக்கப்பட்ட என்பது அவரது விளக்கம்) என்றழைத்து பவத: சுபசரணௌ சரணம் அஹம் ப்ரபத்யே என்று கத்யம் தலைக்கட்டுவது ரமணீயம் - ரமணீயம். ஸத்குருவின் ஆசியாக அஸ்துதே மங்களம் தே என்று கவி முடிப்பதும் கவிலோக சிரச்லாகநீயம்.

புலவர்களை ப்ரமிக்க வைக்கும் புலமை. மல்லியோ முல்லையோ மனோரஞ்சிதமோ மகிழம்பூவோ ஜாதியோ எனும்படி நறுமணம் பரப்பட்டும் இக்கத்ய செந்தாமரை.

இவ்வாறு கத்யம் புரிந்துகொள்ளும் நல்லறிவு படைத்தவர் இல்லை. எழுதுவது எண்ணியும் பார்க்க இயலவில்லை. இது த்யாகப்ரம்ஹ பக்த லோகத்திற்கு வரப்ரஸாதம். த்யாகப்ரும்ஹத்திற்கே கிடைத்த மஹாநிதி.

எல்லோரும் மங்களம் கண்டு பெற்று மகிழட்டும். ஸ்ரீமதி புஷ்பா ஸ்ரீவத்ஸனின் மலர் மணம் பரவட்டும். வளரட்டும் ஸ்ரீமதி புஷ்பாவின் பரமபக்தி.

*மங்களாஷ்டகம்*

*த்யாகப்ரம்ஹத்தின் திவ்யாநுக்ரஹத்தால் அவரிடம் பக்தி ஏற்படுவது அனேக பூர்வ ஜந்மங்களில் ஸம்பாதித்த ஸுக்ருத விசேஷமேயாகும். பக்தி பலவகையில் காணப்படுகிறது. ப்ரஹ்லாதன் நவதாபக்தியை உபதேசித்தார். பக்தியானது செய்பவர்களின் நிலையினால் தரதமபாவத்தை அடைகிறது. பக்தியின் ஆழம் அழுத்தமாகியவற்றைப் பிறர் எளிதில் அறிய முடியாது. நிலைகளுக்கு ஏற்ப பரபக்தி என்றும் பரமபக்தி என்றும் இதைச் சொல்வது சான்றோர் வழக்கம். பக்தி: கிம் ந கரோதி! பக்தி எதைத்தான் செய்யாது! என்று வியந்து பேசுவர்.*

*இந்த அடிப்படையில் ஸ்ரீமதி புஷ்பா ஸ்ரீவத்ஸன் பக்தியில் முதிர்ந்த நிலையையும் முழுதான நிலையையும் அடைந்துள்ளார் என்பதற்கு எடுத்துக்காட்டாய் அவரது அத்புதமான படைப்புகள் அமைந்துள்ளன.*

*மங்களாஷ்டகத்தில் எட்டு ச்லோகங்கள் அனுஸந்திப்பது பெரியோர் சென்ற நல்வழி. எட்டினால் எட்டலாமே! பக்தியின் பரீவாஹத்தால் தோன்றியதால் இது மிகவும் கம்பீரமாயும் அழகாயும் அமைந்துள்ளது. சப்தாலங்காரம் அர்த்தபுஷ்டி - ஈடுபாடு - கற்பனை வளம், கவித்திறன் ஆகியவை மிக உயர்ந்த நிலையில் உள்ளன. ப்ராஸானுப்ராஸங்கள் பரம போக்யம் ஒவ்வொரு ச்லோகமும் பாவ கர்பிதம். இதன் சிறப்பினைக் குறிப்பிடுவது மிகவும் அவச்யம்.*

*நாதப்ரம்ஹாவதாரம் என்று தொடங்கி ஸங்கீத புஷ்பாஸாராய என்று 25 விதமாக த்யாகராயரைக் குறிப்பிடுகிறார். நாதப்ரம்ஹம் என்று தொடங்கி ஸங்கீத ஸாரம் என்று முடிப்பது ரஸம். ஒவ்வொரு ச்லோகத்திலும் (1-8 தவிர) மூன்று அடிகளிலும் ஒரே வர்ணம் அமைந்திருப்பது விசேஷம். ஏழு ச்லோகங்களிலும் ஸப்தஸ்வரங்களான ஸரிகமபதநி என்பது முதல் எழுத்தாக அமைந்தது ஸங்கீத வரப்ரஸாதம். ஸங்கீதத்துக்கு ஏற்றவகையிலும் மங்களத்துக்கு ஏற்றதான ஸௌராஷ்ட்ர ராகத்திற்கு ஏற்ற வகையிலும் சப்தங்கள் அமைந்ததை அனுபவ பூர்வமாக அனுபவிப்போர்க்கு ஏற்படும் ஆனந்தத்துக்கு ஈடு சொல்ல முடியாது. எங்கும் த்யாகராஜாய மங்களம் என்றிருக்க 4வதில் மட்டும் குருநாதாய மங்களம் எனப்பட்டது. இந்த ச்லோகத்தில் க, கா கீ கு என்ற வரிசையில் அமைந்த அமைப்பையும் ரஸிக்கலாம். இங்கு ஒவ்வொரு ச்லோகத்தின் ரஸத்தை எழுதுவது பெருகுமாதலால் சுருக்கமாக குறிப்பிடுகிறேன். ஸங்கீத யோகச்ரேஷ்ட்டாய என்பதில் இரண்டு விதமாகப் பொருள் கொள்ளலாம். ஸங்கீத யோகத்தில் ச்ரேஷ்டர் என்பதுடன் நன்றாகப் புகழ்ப்பெற்ற யோக ச்ரேஷ்டர் என்பதும் சேரும். இவ்வண்ணமே ஸங்கீதத்தில் குருதேவன் என்பதுடன் இவ்வாறு புகழ்ப்பெற்ற குருதேவர் என்பதும் சேருமே. மூன்றில்: ரி, ரீ, ரு என்ற அடைவு ரஸம், ஸங்கீத புஷ்பாஸாராய என்பது கடைசி ச்லோகம். ஆஸாரம் என்றால் வர்ஷம். ஸங்கீத புஷ்பவர்ஷம் என்ற முடிவும் நல்லதே. புஷ்பாவின் ஸர்வஸாரமாகிப் புகழப்பட்டவர் என்பது மங்கள மங்களமாகும்.*

இவ்வண்ணம் தனித்ததொரு ஸ்வானுபவத்துடன் இயற்றப்பட்ட இம்மங்களாஷ்டகத்தில் எனது சிற்றறிவுக்கு எட்டிய வரையில் சில விஷயங்களைக் குறிப்பிட்டேன். ரஸிகர்கள் கூர்ந்து அனுபவிக்கும் பொழுது பல ரஸங்கள் தோன்றும் என்பதில் ஐயமில்லை.

இங்கு இவ்வளவு அத்புதமான அஷ்டகம் எழுதினவர் விஷயமாக வாக்ஸாபல்யத்துக்காக ஒருசிலவற்றையே குறிப்பிட்டுள்ளேன். முன்பே குறிப்பிட்டபடி இந்த ச்லோகத்தையும் சேர்த்து அனுஸந்திக்க த்யாகப்ரம்ஹத்தின் அருள் பெருகி ஸர்வமங்களங்களையும் பெறுவது திண்ணம் என்று திண்ணமாக எண்ணுகிறேன்.

पुष्पानुरागसंगीतं त्यागराजार्य मङ्गलम् ।
ये गायन्ति सदा भक्त्या तेऽपि मङ्गल भाजनम् ॥

மங்களம்.

ஸேவா-ஸ்ரீ.

21-9-93 (ஸேவா ஸ்ரீநிவாஸராகவாசாரியார்.)